22.08.2015

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## விதைகளை வீணாக்க வேண்டாம்-

'விதைகளை வீணாக்காமல், திறந்தவெளிகளில் விதைத்து மரமாக்க வேண்டும்' என, 'வாட்ஸ் ஆப்' மூலம் விழிப்புணர்வு பிரசாரம் செய்யப்படுகிறது.

விதையுள்ள பழங்களை, நாம் அதிகளவு பயன்படுத்துகிறோம்; பழங்களை சாப்பிட்ட பின், விதைகளை குப்பை தொட்டியில் வீசுகிறோம். ஆனால், அந்த விதைகளை வீணாக்காமல், 'விதைபந்து' தயாரித்து, இளைய தலைமுறைக்கும், சுற்றுச்சூழலுக்கும் உதவ முடியும். செம்மண் அல்லது பசுவின் சாணத்தால் செய்த உருண்டையை தான், விதைபந்து என்கின்றனர்.

பழங்களை சாப்பிட்ட பின், நல்ல விதைகளை சேகரித்து வையுங்கள். செம்மண் அல்லது சாணத்தை கலந்து பிசைந்து உருண்டையாக உருட்டி கொள்ளவேண்டும்.

அதன் நடுவே, சேகரித்த விதைகளை வைத்து பந்துகளை உருவாக்க வேண்டும். சூரிய வெப்பத்தில் ஒரு நாள் காய்ந்தால், பந்து இறுகி விடும். வெளியே செல்லும் போது, மரம் நட வாய்ப்புள்ள திறந்தவெளிகளிலும், சாலை ஓரங்களிலும் அவற்றை வீசி விடவேண்டும்.

பந்திற்குள், விதை பத்திரமாக இருப்பதால், மழைக்காலம் வரும் வரை எலி, எறும்பு, குருவிகளிடம் இருந்து, அவை பாதுகாப்பாக இருக்கும். மழை பெய்யும் போது, மண் மற்றும் சாணம் கரைந்து, அவற்றில் இருந்து விதை வெளியேறி முளைக்க துவங்கும். சாணத்துடன் விதை கலந்திருப்பதால், நுண்ணுயிரிகள் உருவாகி, செடி நன்றாக வளர வழிவகை செய்யும். இதன் மூலம், சுற்றுச்சூழலை பாதுகாப்பதுடன், இளைய தலைமுறை பயன்பாட்டிற்கும், இந்த மரங்கள் உதவும்.

காக்கைகள் தனக்கு உணவளித்த மரத்திற்கு, நன்றி தெரிவிக்கும் வகையில், விதைகளை நிலத்தில் எச்சமாக இட்டு செல்கின்றன. பின், அவை மழைக்காலங்களில் வளர்கின்றன.
எனவே, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு அவசியத்தை உணர்ந்து, இனி விதைகளை யாரும் வீணாக்கவேண்டாம்.இவ்வாறு, 'வாட்ஸ் ஆப்' மூலம் தகவல் பரவி வருகிறது.

## சிறுமலையில் 650 மூலிகைகள் ஆய்வில் தகவல்



காந்திகிராமம்:திண்டுக்கல் மாவட்டம் சிறுமலையில் மருத்துவ குணமுள்ள 650 மூலிகைகள் இருப்பது காந்திகிராம பல்கலை ஆய்வில் தெரியவந்துள்ளது.

உலகில் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மூலிகைகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளன. இந்தியாவில் 7 ஆயிரமும், தமிழகத்தில் 2 ஆயிரம் மூலிகைகளும் உள்ளன. இதில் தயாரிக்கப்படும் மருந்துகள் மனிதர்களுக்கு மட்டுமின்றி விலங்குகளுக்கும் பயன்படுகின்றன. அலோபதி மருத்துவத்தில் 100 க்கும் மேற்பட்ட மூலிகை மருந்துகள் பயன்படுகின்றன. இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு 960 மூலிகைகள் ஏற்றுமதியாகின்றன.

ஆண்டிற்கு 100 டன் வரை ஏற்றுமதியாகிறது. இதன்மூலம் ரூ.100 கோடி வருமானம் கிடைக்கிறது. சிறுமலையில் 1,050 தாவரங்கள் உள்ளன. அங்குள்ள மூலிகைகள் குறித்து காந்திகிராம பல்கலை உயிரியியல் பேராசிரியர் ராமசுப்பு தலைமையிலான குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர்.அவர் கூறியதாவது:

சிறுமலை சிறிய மலையாக இருந்தாலும் 650 க்கும் மேற்பட்ட மூலிகைகள் இருக்கின்றன. இதில் முக்கிய மருந்துகள் தயாரிக்க கூடிய வில்லோ டாப்பி, கோல்சியம், டிஜிட்டாலிஸ், நித்ய கல்யாணி, சின்கோனா, ஊமத்தம், கேம்போதீகா, ஆடாதோடா, ஆரோக்ய பச்சை,வெண் குந்திரிகத்தி, சர்ப்பகந்தி போன்ற மூலிகைகள் காணப்படுகின்றன. மூலிகை சேகரிப்பு மலைவாழ் மக்களின் முக்கிய தொழிலாக உள்ளது. காட்டுத்தீ, முறையற்ற சேகரிப்பு போன்ற காரணங்கள் சில மூலிகைகள் அழிந்து வருகின்றன. அவற்றை காக்க தேவையான முயற்சிகளை எடுத்துள்ளோம், என்றார்.

## நிரம்பவில்லை சிறுவாணி ஏமாற்றியது மழை!: நம்பிக்கையுடன் காத்திருப்பு




கோவை :தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவுக்கு பெய்யாமல் ஏமாற்றமளித்துள்ளது. இதனால், கோவை மாநகராட்சி மற்றும் வழியோர கிராமங்களின் முக்கிய குடிநீர் ஆதாரமான, சிறுவாணி அணை நிரம்பவில்லை. ஆனாலும், இறுதி கட்டத்திலாவது மழை தீவிரமடையும் என, அதிகாரிகள் நம்பிக்கையுடன் காத்திருக்கின்றனர்.கோவை மாவட்டத்தில், ஏப்., மாதம் தென்மேற்கு பருவழை பெய்யத்துவங்கியது. மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியிலும், மலையை ஒட்டியுள்ள பகுதிகளில் ஆரம்ப கட்டத்தில் மழை தீவிரமாக பெய்தது. அப்போதே, சிறுவாணி அணை அமைந்துள்ள வனப்பகுதியிலும் மழை பெய்ததால், அணைக்கு நீர் வரத்து அதிகரித்தது.

மே, ஜூன் மாதங்களில் பருவமழை மிதமாக பெய்தது. ஜூலையில் மழை தீவிரமடையும் என, எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், எதிர்பார்த்தபடி மழை பெய்யவில்லை. வழக்கமாக, ஆக., முதல் வாரத்தில், சிறுவாணி அணை நிரம்புவது வழக்கம். கடந்த மூன்று ஆண்டுகளாக, ஆக., 1ம் தேதி அணை நிரம்பியது குறிப்பிடத்தக்கது.

கடந்தாண்டு, அணை நிரம்பிய பிறகும், மழை தொடர்ந்து பெய்ததால், மூன்று மாதங்களுக்கு மேலாக, அணையின் முழுக் கொள்ளளவும் நிரம்பி வழிந்தது. குடிநீர் தேவைக்காக, தினமும், 100 மில்லியன் லிட்டர் அளவுக்கு தண்ணீர் எடுக்கப்பட்ட நிலையிலும், அணையில் நீர்மட்டம் குறையவில்லை. ஆனால், இந்தாண்டு அணை நிரம்பாதது பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் கூறியதாவது: சிறுவாணி அணையில், தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை காலத்தில், ஆண்டுக்கு இரண்டு முறை அணை நிரம்புவது வழக்கம்.சிறுவாணி அணையில் இருந்து, மாநகராட்சியில் 38 வார்டுகளுக்கு, 8.3 கோடி லிட்டர் தண்ணீரும், சாடிவயல், காருண்யா நகர், செம்மேடு, போளுவாம்பட்டி, பூளுவப்பட்டி, ஆலாந்துறை, மாதம்பட்டி, காளம்பாளையம், பேரூர் உள்ள, 30க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு, 2 கோடி லிட்டர் குடிநீரும் வழங்க வேண்டும்.

இந்தாண்டு, தென்மேற்கு பருவமழைக்கு இதுவரையிலும் அணை நிரம்பவில்லை. அணை யில், நேற்றைய நிலவரப்படி, 11.02 மீட்டர் நீர்மட்டம் உள்ளது. குடிநீர் தேவைக்காக, 8.55 கோடி லிட்டர் வினியோகம் செய்யப்படுகிறது. இம்மாத இறுதிக்குள், இறுதிகட்ட பருவமழை பெய்யும் என, எதிர்பார்த்து காத்திருக்கிறோம். இல்லாவிட்டால், வடகிழக்கு பருவமழைக்கு தான், சிறுவாணி அணை நிரம்பும்.கடந்தாண்டு பருவமழைகள் கைகொடுத்ததால், இந்தாண்டு சிறுவாணி அணையில் வறட்சி ஏற்படவில்லை. இந்தாண்டு, மழை ஏமாற்றி விட்டதால், குடிநீர் வினியோகத்தில் இந்தாண்டு சிக்கல் ஏற்படும். இவ்வாறு, குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## வாருங்கள்; பசுமைக்காக ஓரணியில் திரள்வோம் ஆகஸ்ட் புரட்சி!:"வனத்துக்குள் திருப்பூர்' திட்டம் நாளை துவக்கம்




தேச நலன் காப்பதில், அன்று முதல் இன்று வரை, திருப்பூரின் பங்களிப்பு அளப்பரியது. சுதந்திர போராட்டம் துவங்கியதில் இருந்து, பல கட்டங்களில் ஒற்றுமையாய் இணைந்து, சரித்திர சாதனை நிகழ்த்தியவர்கள் நம் மக்கள். இன்று மற்ற நகரங்களுக்கு முன்னுதாரணமாய் இருக்கிறது. சுதந்திர போராட்டத்துக்கு கொடியை உயர்த்திப்பிடித்த திருப்பூர், இன்று நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும், முக்கிய பங்காற்றி வருகிறது.

ஆகஸ்ட் புரட்சி!

இன்று கடல்போல் காட்சியளிக்கும் ஆண்டிபாளையம் குளம், ஒரு காலத்தில், வறண்டு கிடந்தது; முட்புதர் மண்டியிருந்தது. வறட்சியின் கோரம், குளத்தில் தென்பட்டது. "ஊர் கூடி தேர் இழுப்போம்' என்பதுபோல், திருப்பூரில் பணியாற்றும் தொழிலாளர் கள், வணிகர்கள், தொழில் நிறுவன உரிமையாளர்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர், சிறுவர், சிறுமியர் என பலரும் ஒன்று கூடி, உயர்வு தாழ்வு பாராமல், கரசேவை மூலம் குளத்தை தூர்வாரினர். குளத்தின் மையத்தில்

இரண்டு தீவுகளை அமைத்தனர். அவர்களின் உழைப்பு வீண் போகவில்லை; வருண பகவானும் கருணை காட்டினான். இன்று, ஆண்டிபாளையம் குளம் ரம்மியமாக காட்சியளிக்கிறது. மாவட்ட நிர்வாகமும் கூடுதல் கவனம் செலுத்தி, அழகிய அலங்கார வளைவு, பூங்கா அமைத்து, குளத்துக்கு மேலும் பொலிவூட்டி வருகிறது.மக்கள் ஆற்றிய மகத்தான இப்பணி நடந்தது, ஆக., 2013. ஆம்! இரண்டு ஆண்டுகளுக்கு பின், அதே ஆக., மாதத்தில், பசுமை புரட்சி நிகழ்த்துவதற்காக, திருப்பூர் மக்களை மீண்டும் அழைக்கிறோம். "முடியும் என்று நம்பும் மனிதனாலேயே, வரலாறு படைக்கப்படுகிறது,' என்பது, மறைந்த மாமனிதர் அப்துல் கலாம் வாக்கு. அவர் கூறிய வழியில், திருப்பூரை பசுமை நகராக்க முடியும் என்ற எண்ணத்துடன், நாம் மீண்டும் ஒன்று கூடி, ஒரு வரலாறு படைக்க வேண்டும்.கடைசி மூச்சு வரை தேசத்தை நேசித்த, மக்கள் ஜனாதிபதி கலாம், இயற்கையையும், சுற்றுச்சூழலையும் காக்க மரங்கள் வளர்க்க வேண்டும் என்றார். "ஒவ்வொருவரும், தனது வாழ்நாளில் ஐந்து மரக்கன்றுகளையாவது நட்டு பராமரிக்க வேண்டும்,' என, ஒவ்வொரு மேடையிலும் வலியுறுத்தினார். உறுதிமொழியும் ஏற்க வைத்தார். அவரது கனவை உயிர்ப்பிக்கும் நோக்கில், "வெற்றி' அமைப்பு களமிறங்கியுள்ளது. மாவட்ட நிர்வாகம் மற்றும் வனத்துறை ஒத்துழைப்புடன், திருப்பூர் மாவட்டம் முழுவதும் ஒரு லட்சம் மரக்கன்று நடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. நகரை பசுஞ் சோலையாக்கும் இத்திட்டத்தில், "தினமலர்' நாளிதழும் கரம் கோர்த்துள்ளது.உழைப்பாலும், சுறுசுறுப்பாலும் உலக அரங்கில், பின்னலாடை உற்பத்தியில் தனக்கென ஒரு இடத்தை பிடித்த திருப்பூரில், இத்திட்டத்துக்கான விதை, நாளை (ஆக., 23) தூவப்படுகிறது. ஆம், "வனத்துக்குள் திருப்பூர்' திட்டம், திருப்பூர்

சிக்கண்ணா கல்லூரி வளாகத்தில் நாளை காலை 8:30 மணிக்கு துவக்கப்படுகிறது. மாமேதை அப்துல் கலாமுக்கு அஞ்சலி செலுத்தியபின், இத்திட்டம் துவக்கி வைக்கப்படுகிறது. தொழில் துறையினர், தொழிலாளர்கள், தொண்டு நிறுவனங்கள், பொதுமக்கள், மாணவ, மாணவியர் என, அனைத்து தரப்பினரும் பங்கேற்கலாம்.

தொழில் துறையினரும், தொழிலாளர்களும் அவசியம் பங்கேற்க வேண்டும் என்பதற்காகவே, இவ்விழா ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படுகிறது. அன்றைய தினம் விடுமுறை என்பதால், தொழிலாளர்கள் அனைவரும், இவ்விழாவில் பங்கேற்பதை, ஒவ்வொரு நிறுவனத்தினரும் உறுதி செய்ய வேண்டும். நிறுவனம் நிறுவனமாக பங்கேற்க வேண்டும்; நகரை பசுமையாக்க சபதம் ஏற்க வேண்டும்.

## சேலத்தில் "மழை மானியம்' வழங்க நடவடிக்கை: குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை

சேலம்: "நாமக்கல் மாவட்டத்தில் வழங்கியதை போல, சேலம் மாவட்டத்தில் மழை மானியம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், கோரிக்கை விடுக்கப்பட்டது.

சேலம் மாவட்ட கலெக்டர் சம்பத் தலைமையில், நேற்று விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது.

கூட்டத்தில், கலெக்டரின் நேர் முக உதவியாளர் (வேளாண்மை) ராஜேந்திரன் பேசியதாவது: கடந்த கூட்டத்தில், விவசாயிகளிடம் இருந்து, 184 மனுக்கள் பெறப்பட்டது. இதில், 181 மனுக்களுக்கு பதில் அளித்துள்ளதாக, சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், விவசாயிகளுக்கு பெறுதல் போட்டு பதில் அளிக்கவில்லை. விவசாயிகளுக்கு, எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து சரியாக தெரிவிக்க வேண்டும். இவ்வாறு, அவர் பேசினார். விவசாயி மாதேஸ்வரன் பசுக்களுக்கு "மடி' நோய் வருவது குறித்து கேள்வி எழுப்பினார்.

அதற்கு கால்நடை துறை இணை இயக்குனர் (பொறுப்பு) ராஜேந்திரன் பதில் கூறியதாவது: விவசாயிகள், மடியை சுத்தம் செய்யாமல் பாலை கறந்துவிடுகின்றனர். பால் கறப்பதற்கு முன், மடியை நன்றாக கழுவ வேண்டியது அவசியம். பால் கறந்து முடித்த அரை மணி நேரம் வரை மாடுகளை கீழே படுக்க விடக்கூடாது. பால் கறந்த பிறகு, அரை மணி நேரம் வரை, மடியின் துவாரம் விரிந்திருக்கும். தரையில் படுக்கும் போது, கீழே மண்ணில் உள்ள பாக்டீரியாக்கள், அதில் புகுந்துவிடும். இதனால் தான் மடி நோய் வருகிறது. பாதிப்பு ஏற்படுவது தெரிந்தால், உடனே கால் நடை மருத்துவரை அணுக வேண்டியது அவசியமாகும். விவசாயி ஜெயராமன், கால் நடைகளுக்கு காப்பீடு திட்டம் குறித்து கேள்வி எழுப்பினார்.

கால்நடை துறை இணை இயக்குனர் ராஜேந்திரன் பதில் கூறியதாவது: கடந்த ஆண்டு, 50 சதவீதம் மானியம் வழங்கப்பட்டது. நடப்பாண்டு, எஸ்.சி., பிரிவினருக்கு, 75 சதவீதம், எஸ்.டி., க்கு, 80 சதவீதம், இதர சமூகத்தினருக்கு, 50 சதவீதம் என அறிவிக்கப்பட்டுள்ளது. விவசாயி சண்முகம்: கருமந்துறை பழத்தோட்டத்தில், விவசாயிகள் பழத்தை பறிப்பதற்கு முறையான பயிற்சி அளிக்க வேண்டும். அதிகாரிகள் கூறுவதை போல அதிகம் மழை பெய்வதில்லை. இதனால் விவசாயிகள் பாதிப்படைகிறோம். நாமக்கல் மாவட்டத்தில் மழை மானியம் வழங்கப்பட்டதை போல, சேலம் மாவட்டத்திலும் மழை மானியம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வேளாண்மை துறை இணை இயக்குனர் இளங்கோ: சேலத்தில், 21 வட்டாரத்தில் மழை மானியம் வழங்கப்பட்டு வருகிறது. அனைத்து பகுதி விவசாயிகளுக்கும் வழங்க முடியாது. மழை மானியம் பெறுவதற்கு நிறைய விதிமுறை உள்ளது. இதுகுறித்து அரசுக்கு தெரிவிக்கிறோம்.

விவசாயி பெருமாள்: கொல்லிமலையில் மரவள்ளிக்கிழங்கை அரசே கொள்முதல் செய்து கொள்கிறது. அங்குள்ள விவசாயிகள் நிம்மதியாக இருக்கின்றனர். சேலத்திலும், இடைத்தரகர்களை ஒழித்து, விவசாயிகள் நலம் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கலெக்டர் சம்பத்: குறைதீர் கூட்டத்தில், ஒவ்வொரு துறையில் இருந்தும், தலைமை அதிகாரிகள் மட்டும் கூட்டத்தில் பங்கேற்றால் போதும். அப்போது தான் விவசாயிகள் அமருவதற்கு இடம் கிடைக்கும். தற்போதைய நிலையில், இந்த கூட்ட அரங்கை வேறு இடத்துக்கு இடமாற்றம் செய்ய முடியாது. அடுத்த கூட்டம், காலை, 11 மணிக்கு முன்பாக துவங்கப்படுவது குறித்து பரிசீலிக்கப்படும்.

**கால்நடை, கோழிக்கழிவு விலை... அதிகரிப்பு: இயற்கை உரமிட விவசாயிகள் ஆர்வம்**

சின்னமனூர்:தென்னை, பழ மரங்களில் நீடித்த பலன் கொடுக்கும் தொழு உரமிட விவசாயிகள் இயற்கை உரம் மீது ஆர்வம் காட்டி வருவதால் கால்நடை, கோழிக் கழிவுகள் ஒரு டன் ரூ.3 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

தோட்டக்கலை துறையின் புள்ளி விபர அடிப்படையில் 2011 ல் தேனி மாவட்ட அளவில் தென்னை 18 ஆயிரத்து 173 எக்டேரிலும், பழ மரங்கள் 19 ஆயிரத்து 152 எக்டேரிலும் பயிரிடப்பட்டுள்ளது. கூடுதல் மகசூல்

கிடைப்பதற்காக ரசாயன உரங்களை அதிகளவில் பயன்படுத்தினர். மழை வளம் குறைந்து வருவதால் ரசாயன உரம் பயன்படுத்திய மரங்கள் எதிர்பார்த்த பலனளிக்கவில்லை. இயற்கையான உரமிடும் முறையில் நீடித்த பலன் கிடைப்பதாலும், வறட்சியை மரங்கள் தாங்கி கொள்வதாலும் தொழு உரமிட விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.

பதினெட்டாம் கால்வாய் விவசாயிகள் சங்க தலைவர் ராமராஜ் கூறியதாவது: தென்னை விவசாயிகளுக்கு கோடை காலத்தில் குறும்பை உதிர்வது பெரும் பிரச்னையாக உருவெடுத்துள்ளது. வறட்சியை மரங்கள் தாங்க முடியாததற்கு ரசாயன உரம் பயன்படுத்துவது காரணமாக அமைந்துள்ளது. கால்நடை, கோழிக் கழிவுகளை உரமாக பயன்படுத்தும் போது இந்த குறை நீங்குகிறது. ஒரு டிராக்டர் லோடு கால்நடை சாணம் ரூ.3 ஆயிரத்திற்கும், கோழிக் கழிவு ரூ.3 ஆயிரத்து 500 க்கும் வாங்கப்படுகிறது. இயற்கை உரமிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுவதால் மாடு, கோழிக் கழிவுகளுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது, என்றார்.

சென்டெக்ட் கே.வி. கே., திட்ட இயக்குனர் மாரிமுத்து கூறியதாவது: ஆர்கானிக் உரங்களில் மரத்திற்கு தேவையான நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம், நுண்ணுயிர் சத்து சம அளவில் கிடைக்கிறது. மலிவாக கிடைக்கிறது என்பதால் விவசாயிகள் யூரியாவை அதிகளவில் பயன் படுத்துகின்றனர். இதனால் சமச்சீரான சத்துகள் மரங்களுக்கு கிடைப்பதில்லை. ரசாயன உரக்கலவை சமச்சீராக இல்லாவிட்டால் மரங்கள் பாதிப்படையும். கோடை வெப்பத்தை தாங்கும் தன்மையை இழந்துவிடும். கால்நடை பயன்பாடு குறைந்து விட்டதால், தொழு உரம் கிடைப்பதில் சிக்கல் ஏற்படுகிறது. மரங்களுக்கிடையே கொழுஞ்சி,

அகத்தி போன்றவற்றை ஊடுபயிர் நடவு செய்து அவற்றை உழுது, மடித்து இயற்கை உரமாக மாற்றலாம், என்றார்.

## 4 விவசாயிகள் தற்கொலை

பெங்களூரு:கர்நாடகா ராம்நகர், கோலார், விஜயபுரா ஆகிய மாவட்டங்களில் நேற்று நான்கு விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர்.

ராம்நகர் மாவட்டம், தாசரஹள்ளியில் வசித்து வந்தவர் விவசாயி முரளி, 40; இவர் தன் நிலத்தில் விவசாயம் செய்ய லட்சக்கணக்கான ரூபாய் கடன் வாங்கியிருந்தார். கடனை தீர்க்க முடியாமல்

அவதிப்பட்டு வந்த முரளி நேற்று காலை துாக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

கோலார் மாவட்டம், ஜஞ்சாலஓபட்டி கிராமத்தில் வசித்து வந்த விவசாயி வெங்கடேஷ், 34; இவரது மனைவி பத்மாவதி, 25; இவர்கள் விவசாயம் செய்வதற்காக வங்கி உட்பட பல்வேறு இடங்களில், 1.50 லட்சம் ரூபாய் கடன் வாங்கியிருந்தனர்.

கடனை திருப்பி கொடுக்க முடியாததால், தனியார் நிதி நிறுவனத்தினர் டிராக்டரை பறிமுதல் செய்தனர். இந்த தம்பதியர், உணவில் விஷம் கலந்து தற்கொலை செய்தனர்.விஜயபுரா மாவட்டம், தடவளகா கிராம விவசாயி மளசித்தப்பா ஹர்த்தரகி, 55; 3 ஏக்கர் நிலத்தில், துவரை விதைத்தார். விளைச்சல் சேதமடைந்த தால் துாக்கிட்டு தற்கொலை செய்தார்.

## மூன்று லட்சம் விவசாயிகளுக்கு ரூ.1,520 கோடி பயிர் கடன்

கூட்டுறவு வங்கிகளில், மூன்று லட்சம் விவசாயிகளுக்கு, 1,520 கோடி ரூபாய், பயிர் கடன் வழங்கப்பட்டு உள்ளது.தமிழகத்தில், உணவு உற்பத்தியை அதிகரிக்க, நகர, தொடக்க கூட்டுறவு வங்கிகள் மூலம், விவசாயிகளுக்கு கடன் வழங்கப்படுகிறது. நடப்பாண்டில், 5,500 கோடி ரூபாய் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதில், தற்போது வரை, மூன்று லட்சம் விவசாயிகளுக்கு, 1,520 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டு உள்ளது.

இதுகுறித்து, கூட்டுறவு துறை அதிகாரி ஒருவர் மேலும் கூறியதாவது: கூட்டுறவு வங்கியில், ஒரு கிளையில் இருந்து, மற்ற கிளைக்கு பணம் செலுத்தும் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும். இதன் மூலம், விவசாயிகள் உட்பட, பலரும் பயன் அடைவர்.கூட்டுறவு வங்கியில் கொள்ளை சம்பவங்களை தடுக்க, கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டு வருகிறது.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை

# தினமணி


நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு



காவிரியின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழையின் காரணமாக, மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு வெள்ளிக்கிழமை காலை நொடிக்கு 15,528 கனஅடியாக அதிகரித்தது. அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு நொடிக்கு 13,000 கனஅடி தண்ணீரும், கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்துக்கு நொடிக்கு 500 கனஅடி தண்ணீரும் திறக்கப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 54.01 டி.எம்.சியாக இருந்தது. நீர் திறப்பைவிட வரத்து அதிகமாக இருப்பதால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் சரிவிலிருந்து மீண்டு மெல்ல உயரத் தொடங்கியுள்ளது.

## குறைந்த தண்ணீரில் அதிக மகசூல் தரும் நீர்த் தெளிப்பான்: கால்நடைப் பல்கலைக்கழகத்தில் வடிவமைப்பு



குறைந்த நீரில் அதிக மகசூலை அளிக்கக் கூடிய நகரும் பன்முக பாசன நீர்த் தெளிப்பான் கருவியை தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம் வடிவமைத்துள்ளது. இந்தப் புதியக் கருவியைப் பயன்படுத்தி பல்கலைக்கழக வளாகத்தில் 2 டன் மக்காச்சோளம் மகசூல் செய்யப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் கால்நடை உற்பத்தி கல்வி இயக்குநர் பாபு தலைமையில், பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணை பேராசிரியர் டென்சிங் ஞானராஜ், உதவிப் பேராசிரியர் முத்துராமலிங்கம் ஆகியோர் அடங்கியக் குழு இந்தக் கருவியை வடிவமைத்துள்ளது. இதுகுறித்து பேராசிரியர் டென்சிங் ஞானராஜ் கூறியது:

பெருகிவரும் தீவனப் பற்றாக்குறையைப் போக்கவும், தண்ணீர் சிக்கனத்தைக் கருத்தில் கொண்டும், பல்வேறு ஆராய்ச்சிகளை பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிப் பண்ணை மேற்கொண்டு வருகிறது. இந்த நிலையில் ஸ்பெயின் நாட்டில் சொட்டுநீர்ப் பாசன முறையில் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கால்நடைத் தீவனம் அமோக விளைச்சல் செய்யப்படுவது தெரியவந்தது. அந்தத் தொழில்நுட்பத்தை அறிய

பேராசிரியர் குழு ஸ்பெயின் சென்று ஆலோசனை மேற்கொண்டது. அந்தத் தொழில்நுட்பத்தின் உதவியுடன் சோதனை அடிப்படையில் நகரும் பன்முகப் பாசன நீர்த் தெளிப்பானை சிறிய அளவில் வடிவமைத்தோம். இதை வடிவமைக்க 3 மாதங்கள் ஆனது. இந்தக் கருவி மூலமாக, மிகக் குறைந்த நீரில் இரண்டு முறை வெற்றிகரமாக விளைச்சல் செய்து, 2 டன் மக்காச்சோளத்தை மகசூல் செய்தோம். இப்போது ரூ. 50 ஆயிரம் செலவில் பெரிய அளவில் இந்தக் கருவியை வடிவமைத்துள்ளோம். 90 அடி அகலம் கொண்ட இந்த நகரும் பன்முக பாசன நீர்த் தெளிப்பானில் 16 நீர் தெளிப்பான்களைக் கொண்ட இறக்கை போன்ற அமைப்பு பொருத்தப்பட்டிருக்கும். ஒவ்வொரு நீர்த் தெளிப்பானும் ஒரு நிமிஷத்துக்கு 13 லிட்டர் தண்ணீரைப் பாய்ச்சக் கூடிய திறன் கொண்டது. இதன்மூலம் 30 நிமிஷத்தில் ஒரு ஏக்கர் நிலத்துக்கு நீர்ப் பாசனம் செய்துவிடலாம் என்றார்.

### மானியத்துடன் கூடிய கால்நடை தீவனப் பயிர் அபிவிருத்தி திட்டம்

அரசு மானியத்துடன் கூடிய கால்நடை தீவனப்பயிர் அபிவிருத்தி திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக ஆட்சியர் வே.க. சண்முகம் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் நிகழ் நிதியாண்டில் அரசு மானியத்துடன் கூடிய தீவனப்

பயிர் சாகுபடி திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன. இறைவையில் பல்லாண்டு தீவன சோளம், வேலி மசால் தீவனப் பயிர் 0.25 ஏக்கரில் சாகுபடி செய்ய தீவன விதைகள் வழங்குதல் (பயனாளிக்கு அதிகபட்சம்

ஒரு ஏக்கர்), மானாவாரியில் 0.25 ஏக்கரில் தீவனச் சோளம், தீவனத் தட்டப்
பயறு சாகுபடி செய்ய தீவன விதைகள் வழங்குதல் (பயனாளிக்கு அதிகபட்சம் ஒரு ஏக்கர்).
தெளிப்பு நீர் பாசனக் கருவிகள் நிறுவ விவசாயிகளுக்கு
ரூ. 18,750 (75 சதவீதம்) மானியம் வழங்கப்படும். அசோலா திடல் அமைக்க ரூ. 1,600 மானியம் (100 சத மானியம்), ஊறுகாய் புல் தயாரித்திட ரூ. 2,030 (100 சதவீதம் மானியம்) வழங்கப்படுகிறது. தீவனப் பண்ணை மூலம் மர வகை தீவனத்தின் முக்கியத்துவத்தை உணர்த்த வெவ்வேல், பூவரசு, கிலைரிசிடியா, வாகை, கல்யாண முருங்கை, வேம்பு, கொடுக்காப்புலி போன்ற மர விதைக் கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. தேசிய கால்நடைக் குழுமம் மூலம் செயல்படுத்தப்
படும் மத்திய அரசு திட்டத்தில் புல் நறுக்கும் கருவி மானிய விலையில் வழங்கப்படுகிறது.
மேற்கண்ட திட்டங்கள் மூலம் பயன்பெற விரும்பும் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் குறிப்பிட்ட திட்டங்களை குறிப்பிட்டு எழுத்து மூலமாக கால்நடை உதவி மருத்துவரை நேரில் தொடர்பு கொண்டு விண்ணப்பம் அளித்து பயன்பெறலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

## திருவள்ளூரில் பலத்த மழை

திருவள்ளூர் மாவட்டத்தில் வியாழக்கிழமை நள்ளிரவில் இடி, மின்னலுடன் கூடிய பலத்த மழையால் பல இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள திருவள்ளூர், திருத்தணி, திருவாலங்காடு, தாமரைப்பாக்கம், பொன்னேரி, அம்பத்தூர், பேரம்பாக்கம் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் வியாழக்கிழமை இரவு 10 மணியளவில் தொடங்கிய மழை, பலத்த இடி, மின்னலுடன் விடாமல் தொடர்ந்து அதிகாலை வரை பெய்தது.

இதில், மாவட்டம் முழுவதும் உள்ள பல நெடுஞ்சாலைகள், கிராமச் சாலைகள் கடுமையாகச் சேதமடைந்தன.

மழையளவு: திருத்தணி-49 மி.மீ, திருவாலங்காடு-45 மி.மீ. தாமரைப்பாக்கம்- 40 மி.மீ. பூந்தமல்லி-37 மி.மீ.திருவள்ளூர்-36 மி.மீ. அம்பத்தூர்-34 மி.மீ, பொன்னேரி-30 மி.மீ.

பூண்டி-30 மி.மீ. செங்குன்றம்-30 மி.மீ. ஆர்.கே.பேட்டை-23 மி.மீ. சோழவரம் -17 மி.மீ. ஊத்துக்கோட்டை-8 மி.மீ. பள்ளிப்பட்டு -6 மி.மீ. கும்மிடிப்பூண்டி-

5 மி.மீ. செம்பரம்பாக்கம்-2 மி.மீ. மழை பதிவானது.

## தேவையான நெல் ரக விதைகளை வழங்க விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தல்

கமிஷன் தொகை கிடைக்கும் என்பதற்காக, குறிப்பிட்ட சில நிறுவனங்களின் நெல் விதைகளை மட்டுமே வேளாண் துறை அதிகாரிகள் விற்பனை செய்கின்றனர். இப்பகுதிக்கு ஏற்ற நெல் ரக விதைகளை வழங்க வேண்டுமென குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் வெள்ளிக்கிழமை வலியுறுத்தினர்.

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் வளாக கூட்டரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம், ஆட்சியர் ச. மலர்விழி தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் மாவட்ட வருவாய் அலுவலர் இளங்கோ, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) சுதர்சன், வேளாண் இணை இயக்குனர் குருமூர்த்தி உட்பட பல்வேறு துறை அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இதில் நடைபெற்ற விவாதங்கள்:

கூட்டுறவு சங்கத் தலைவர் சேங்கைமாறன்:

திருப்புவனம், மானாமதுரை பகுதியில் 2013- 2014 இல் வறட்சி ஏற்பட்டபோது விவசாயிகள் லாரி மூலம் நீர்பாய்ச்சி விவசாயம் செய்தனர். ஆனாலும் விளைச்சல் இல்லை. பயிர் காப்பீடு செய்த ஒரு சிலருக்கு கூட இழப்பீடு கிடைக்கவில்லை.

விவசாயிகள் சங்க பொதுச் செயலாளர் ஆதிமூலம்:

பழையனூர், வல்லாரேந்தல் பகுதி விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்படவில்லை.

ஆதிமூலம்: நான்கு வழிச்சாலைக்கு நிலம் கையகப்படுத்தியதற்கு இதுவரை பாதிக்கப்பட்டோருக்கு பணம் தரவில்லை. வருவாய்த்துறை அதிகாரிகள் சான்றிதழ் வழங்காமல் அலைக்கழிப்பதால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆட்சியர்: ஆட்சியர் அலுவலக வளாகத்தில், இது குறித்து செவ்வாய்க்கிழமை கூட்டம் நடைபெறும்.

கீழநெட்டூர் அய்யாச்சாமி: மணல் திருடியதால் வைகை ஆற்றில் உள்ள கால்வாய்கள் மேடாகி விட்டது. நீதிமன்றமே கருவேல்மரங்களை அகற்ற

உத்தரவிட்டுள்ளது. கருவேல்மரங்களை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாவட்ட விவசாய சங்க நிர்வாகி: மின்இணைப்பு சிறப்புத் திட்டத்தில் விவசாயிகள் ரூ. 50 ஆயிரம், 25 ஆயிரம், 10 ஆயிரம் பணம் செலுத்தி, மின் இணைப்பு பெற

காத்திருக்கின்றனர். கடந்த நான்கு ஆண்டாக 4 பேருக்குத்தான் கொடுத்துள்ளனர். 1997-ல் விண்ணப்பித்த எனக்கு இப்போதுதான் மின்கம்பங்கள் நட்டுள்ளனர். 25 ஆண்டுகளாக மின் இணைப்புக்காக பலர் காத்திருக்கின்றனர்.

உழவர் மன்ற அமைப்பாளர் கன்னியப்பன்: அந்தந்தப் பகுதி விவசாயிகள் அதிகளவில் பயிரிடும் நெல் விதைகளை வேளாண்மைத்துறை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வேளாண்மைத்துறை இணை இயக்குநர் குருமூர்த்தி: தாலுகா வாரியாக இருப்பு உள்ள விதை நெல் விவரங்களை பட்டியலிட்டார்.

விவசாயி அய்யாச்சாமி: அதிகாரிகள் வாசித்த விதை நெல் சம்பந்தப்பட்ட அலுவலகங் களில் இல்லை என்றார்.

ஆட்சியர்: மாலைக்குள் சம்பந்தப்பட்ட வேளாண் அலுவலகத்திற்கு தாசில்தாரை அனுப்பி பரிசோதனை செய்யப்படும் என்றார்.

### ஆகஸ்ட் 26-ல் விவசாயிகள் குறை கேட்புக் கூட்டம்

கோவை மாவட்ட விவசாயிகளுக்கான குறை கேட்புக் கூட்டம் புதன்கிழமை (ஆகஸ்ட் 26) நடைபெற உள்ளது.

ஆட்சியர் அலுவலகத்தில் அன்று காலை 10 மணியளவில் விவசாயிகள் குறை கேட்புக் கூட்டம் ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் தலைமையில் நடைபெற உள்ளது. இதில்,வேளாண்மைத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அதிகாரிகள் பங்கேற்கின்றனர். கோவை மாவட்ட விவசாயிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களது வேளாண்மை தொடர்பான புகார்களை நேரிலோ, மனுவாகவோ வழங்கலாம் என மாவட்ட ஆட்சியர் அலுவலக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வேளாண் குறை கேட்புக் கூட்டம்

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேளாண் குறைகேட்புக் கூட்டம் ஆகஸ்ட் 28-ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 11 மணி அளவில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 11 முதல் 11.30 மணி வரை விவசாயிகள் தங்களது மனுக்களை கொடுக்கலாம். 11.30 முதல் 12.30 மணி வரை விவசாய சங்கப் பிரதிநிதிகள் விவசாயம் தொடர்பான பிரச்னைகள் குறித்து தெரிவிக்கலாம். பகல் 12.30 முதல் 1.30 முடிய அலுவலர்களின் விளக்கங்கள் தெரிவிக்கப்படவுள்ளன.

இக்கூட்டத்தில், விவசாயிகள் கலந்துகொண்டு பயன்பெறலாம் என ஈரோடு மாவட்ட ஆட்சியர் எஸ்.பிரபாகர் தெரிவித்துள்ளார்.

## வேலூர் மாவட்டத்தில் பலத்த மழை

வேலூர் மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை பரவலாக பலத்த மழை பெய்தது.

வியாழக்கிழமை இரவு மாவட்டத்தின் பல பகுதிகளில் பலத்த இடியுடன் கூடிய பெய்த மழையால் மின்சாரம் பல இடங்களில் துண்டிக்கப்பட்டது. அணைக்கட்டு அருகேயுள்ள அப்புக்கல் கிராமத்தில் மின்னல் தாக்கியதில் விவசாயி கோவிந்தராஜின் கோழிப் பண்ணை கொட்டகை எரிந்து சாம்பலானது. ஒடுகத்தூர் தீயணைப்பு நிலைய அலுவலர்கள் சம்பவ இடத்துக்குச் சென்று தீயை அணைத்தனர்.

வேலூர் நகரில் சைதாப்பேட்டை, காகிதப்பட்டறை உள்ளிட்ட இடங்களில் உள்ள தாழ்வான தெருக்களில் தண்ணீர் தேங்கியது.

வெள்ளிக்கிழமை காலை வேலூர் மாநகரில் லேசான வெயில் காணப்பட்டாலும், பிற்பகலில் மீண்டும் கருத்த மேக மூட்டம் ஏற்பட்டு சுமார் 2 மணி நேரத்துக்கும் மேலாக மழை பெய்தது.

மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை காலை 8 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு விவரம் (மி.மீட்டரில்): ஆம்பூர் 8, அரக்கோணம் 48.5, குடியாத்தம் 4.3, சோளிங்கர் 16, வேலூர் 32, வாலாஜாபேட்டை 20.2, ஆலங்காயம் 2, மேல்ஆலத்தூர் 6.8, ஆற்காடு 68, காவேரிப்பாக்கம் 45.

## பரமத்தி வேலூர் ஏலச்சந்தையில் பூக்கள் விலை உயர்வு

பரமத்தி வேலூர் ஏலச்சந்தையில் பூக்களின் விலை உயர்ந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

பரமத்தி வேலூர் வட்டத்தில், பரமத்தி, செங்கப்பள்ளி, கரசப்பாளையம், கொளக்காட்டுபுதூர், அண்ணாநகர், கபிலர்மலை உள்ளிட்ட பகுதிகளில், அதிக அளவில் பூக்கள் பயிர் செய்யப்பட்டுள்ளன.

இங்கு விளையும் பூக்களை, விவசாயிகள் தினந்தோறும் பரமத்தி வேலூர் பூக்கள் ஏலச்சந்தையில் ஏலம் விடுகின்றனர். வேலூர், ஜேடர்பாளையம், பாலப்பட்டி, பரமத்தி மற்றும் கரூர் மாவட்டத்தில் இருந்து வியாபாரிகள் பூக்களை ஏலம் எடுத்துச் செல்கின்றனர்.

கடந்த வார ஏலத்தில், குண்டு மல்லி கிலோ ரூ.200-க்கும், முல்லை பூ கிலோ ரூ.200-க்கும், சம்பங்கி கிலோ ரூ.150-க்கும், செண்டு மல்லி கிலோ ரூ.40-க்கும், அரளி கிலோ ரூ.80-க்கும் ஏலம் போனது. வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்தில், குண்டு மல்லி கிலோ ரூ.500-க்கும், முல்லை பூ கிலோ ரூ.600-க்கும், சம்பங்கி கிலோ ரூ.400-க்கும், செண்டு மல்லி கிலோ ரூ.60-க்கும், அரளி கிலோ ரூ.150-க்கும் ஏலம் போனது. திருமண முகூர்த்தங்கள் அதிக அளவில் இருப்பதால் பூக்கள் விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

பூக்கள் விலை உயர்ந்துள்ளதால், பூக்கள் பயிர் செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

### மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

காவிரியின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் மழையின் காரணமாக மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு நொடிக்கு 15,528 கனஅடியாக அதிகரித்துள்ளது.

வெள்ளிக்கிழமை காலை மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு நொடிக்கு 15,528 கன அடியாக அதிகரித்தது.

அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு நொடிக்கு 13,000 கன அடி தண்ணீரும், கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்துக்கு நொடிக்கு 500 கன அடி தண்ணீரும் திறக்கப்படுகிறது.

அணையின் நீர் இருப்பு 54.01 டி.எம்.சியாக இருந்தது. நீர் திறப்பைவிட வரத்து அதிகமாக இருப்பதால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் சரிவிலிருந்து மீண்டு மெல்ல உயரத் தொடங்கியுள்ளது.

## சோலார் உலர்த்தி: ரூ. 12.88 லட்சம் மானியம் வழங்க இலக்கு

கரூர் மாவட்டத்தில் 7 இடங்களில் சோலார் உலர்த்தி அமைக்க ரூ. 12.88 லட்சம் மானியம் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் வேளாண்மைத் துறை சார்பில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்துக்கு தலைமை வகித்து ஆட்சியர் பேசியது:

கரூர் மாவட்டத்தில் ஆண்டு சராசரி மழையளவு 652.2 மி.மீ., நிகழாண்டில் ஆகஸ்ட் மாதம் முடிய சராசரியாக 248.70 மி.மீ.,க்கு இதுவரை 322.57 மி.மீ., மழை கிடைத்துள்ளது. இதனை பயன்படுத்தி பெரும்பாலான இடங்களில் சிறுதானியப் பயிர்கள் 1,834 ஹெக்டேரிலும், பயிறு வகை பயிர்கள் 121 ஹெக்டேரிலும், எண்ணெய்வித்து பயிர்கள் 960 ஹெக்டேரிலும், கரும்பு 2,016 ஹெக்டேரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களிலும் சான்று பெற்ற நெல் ரக விதைகளான பிபிடி-5204, கோ-50 ஆகியவை 160 மெ.டன் இருப்பு வைக்கப்பட்டு இதுவரை 30 மெ.டன் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இயந்திரம் மூலம் நெல் நடவு மேற்கொண்டு நெற்பயிரில் செயல்விளக்கங்கள் அமைக்க மானியமாக ஹெக்டேருக்கு ரூ. 3,000 வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தில் இதுவரை ரூ. 2500 வழங்கப்படுகிறது. மாவட்டத்தில் சோலார் உலர்த்தி 2015-16ஆம் ஆண்டில் ஏழு இடங்களில் அமைக்க ரூ. 12.88 லட்சம் மானியம் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தில் 2 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மாவட்டத்தில் மரவள்ளி பயிரில் ஊடுபயிராக பயறு வகைப் பயிர்கள் சாகுபடி செய்ய மானியத்தொகை வழங்கும் திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படுகிறது என்றார்.கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மு. அருணா, வேளாண் இணை இயக்குநர் மாது மற்றும் முன்னோடி விவசாயிகள் பங்கேற்றனர்.

## பேரிடர் மேலாண்மை குறித்த செயல்முறை விளக்கம்

நாகையில் அனைத்து துறை அரசு அலுவலர்களுக்கான பேரிடர் காலங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை செயல்முறை பயிற்சி வியாழக்கிழமை அளிக்கப்பட்டது.

வங்கக் கடலில் புயல் சின்னம் குறித்து வானிலை மையம் மாநில பேரிடர் மையத்திலிருந்து எச்சரிக்கை வருகிறது. அதைத்தொடர்ந்து மீட்புப் பணி மற்றும் மீட்புக் குழு மூலம் மீட்புப் பணி மேற்கொள்ளப்பட்டு, மூன்று பணிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, முதல் மற்றும் இரண்டாவது குழு நாகூர் பட்டினச்சேரி வெட்டாற்றில் வெள்ளத்தில் சிக்கியவர்களை படகு மூலம் மீட்டு வந்து முதலுதவி அளிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சைக்கு

அனுப்பிவைக்கப்பட்டனர். மருத்துவக் குழுவினர் பாதுகாப்பு மையத்தில் மருத்துவ சிகிச்சை அளித்தனர்.

மூன்றாவது குழு அக்கரைப்பேட்டை கீச்சாங்குப்பம் கடுவையாற்றில் வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு நாகை தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் தங்கவைக்கப்பட்டு அவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது.

தேசிய பேரிடர் மீட்பு படை அரக்கோணம், தீயணைப்புத் துறை, மருத்துவக்குழு, காவல்துறை, வருவாய்துறை, மீன்வளத்துறை, நகராட்சி, மின்வாரியம், பொதுப்பணித் துறை மற்றும் பல்வேறு துறையினர் செயல்முறை விளக்கத்தில் பங்கேற்றனர். மீட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல் தொடர்பாக வாகனங்களில் ஒலிபெருக்கி மூலம் விளம்பரப்படுத்தப்பட்டது.

### பேரிடர் மேலாண்மை குறித்த செயல்முறை விளக்கம்

நாகையில் அனைத்து துறை அரசு அலுவலர்களுக்கான பேரிடர் காலங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை செயல்முறை பயிற்சி வியாழக்கிழமை அளிக்கப்பட்டது.

வங்கக் கடலில் புயல் சின்னம் குறித்து வானிலை மையம் மாநில பேரிடர் மையத்திலிருந்து எச்சரிக்கை வருகிறது. அதைத்தொடர்ந்து மீட்புப் பணி மற்றும் மீட்புக் குழு மூலம் மீட்புப் பணி மேற்கொள்ளப்பட்டு, மூன்று பணிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, முதல் மற்றும் இரண்டாவது குழு நாகூர் பட்டினச்சேரி வெட்டாற்றில் வெள்ளத்தில் சிக்கியவர்களை படகு மூலம் மீட்டு வந்து முதலுதவி அளிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சைக்கு

அனுப்பிவைக்கப்பட்டனர். மருத்துவக் குழுவினர் பாதுகாப்பு மையத்தில் மருத்துவ சிகிச்சை அளித்தனர்.

மூன்றாவது குழு அக்கரைப்பேட்டை கீச்சாங்குப்பம் கடுவையாற்றில் வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு நாகை தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் தங்கவைக்கப்பட்டு அவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது.

தேசிய பேரிடர் மீட்பு படை அரக்கோணம், தீயணைப்புத் துறை, மருத்துவக்குழு, காவல்துறை, வருவாய்துறை, மீன்வளத்துறை, நகராட்சி, மின்வாரியம், பொதுப்பணித் துறை மற்றும் பல்வேறு துறையினர் செயல்முறை விளக்கத்தில் பங்கேற்றனர். மீட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல் தொடர்பாக வாகனங்களில் ஒலிபெருக்கி மூலம் விளம்பரப்படுத்தப்பட்டது.

## கூடுதல் விலைக்கு உரம் விற்றால் நடவடிக்கை: ஆட்சியர்

உரங்களை விற்பனையாளர்கள் கூடுதல் விலைக்கு விற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் எம். மதிவாணன் எச்சரிக்கை விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

நிகழாண்டு மாவட்டத்தில் 3,75,250 ஏக்கர் பரப்பில் சம்பா மற்றும் தாளடி நெல் சாகுபடி மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கு தேவையான யூரியா, டிஏபி, பொட்டாஷ், ரசாயன உரங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்களில் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

தற்போது யூரியா தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் 3,100 மெட்ரிக் டன்னும், தனியார் உர விற்பனை நிலையங்களில் 2,900 மெட்ரிக் டன்னும் உள்ளது. டிஏபி தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் 2,400 மெட்ரிக் டன், தனியார் உர விற்பனை நிலையங்களில் 624 மெட்ரிக் டன் உள்ளது. பொட்டாஷ் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் 745 மெட்ரிக் டன்னும், தனியார் உர விற்பனை நிலையங்களில் 890 மெட்ரிக் டன்னும் உள்ளது.

காம்ப்ளக்ஸ் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்களிலும் சேர்த்து 450 மெட்ரிக் டன் இருப்பில் உள்ளது.

உரங்களை கூடுதல் விலைக்கு விற்கும் விற்பனையாளர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதுகுறித்து புகார் தெரிவிக்க விரும்புவோர் 9750963314 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

## காய்கனி கொள்முதல் சந்தைகளில் ஆலோசனை மையங்கள்

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள காய்கனி கொள்முதல் சந்தைகளில் விவசாயிகளுக்கு உதவும் வகையில் புதிதாக ஆலோசனை மையங்கள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

திருநெல்வேலி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் மு.கருணாகரன் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. வேளாண்மை துறை இணை இயக்குநர் சந்திரசேகரன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் நடைபெற்ற விவாதம் வருமாறு:

அதிகாரிகள்: தமிழகத்தில் உற்பத்தி செய்யப்பட்டு கேரளத்துக்கு அனுப்பப்படும் காய்கனிகளில் பூச்சிமருந்துகளின் தாக்கம் இருப்பதாக எழுந்த புகாரையடுத்து, நஞ்சில்லாத காய்கனிகளை சந்தைப்படுத்துவது தொடர்பாக பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மனிதச் சங்கிலி, பள்ளி மாணவர்களின் பயிலரங்குகள் ஆகியவை நடைபெற்றுள்ளன. இதுதவிர இம்மாவட்டத்தில் உள்ள பெரிய காய்கனிகள் கொள்முதல் சந்தைகளான காவல்கிணறு, நயினார்குளம், சங்கரன்கோவில், புளியங்குடி, சுரண்டை, ஆலங்குளம், பாவூர்சத்திரம், தென்காசி, செங்கோட்டை ஆகியவற்றில் விவசாயிகளுக்கு உதவும் வகையில் புதிதாக ஆலோசனை மையங்களைத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த மையங்களில் வேளாண்மை, தோட்டக் கலை, வேளாண்மை விற்பனைத் துறையைச் சேர்ந்த அலுவலர்கள் சுழற்சிமுறையில் பணியமர்த்தப்படுவார்கள். நஞ்சு இல்லாத காய்கனி உற்பத்திக்கான ஆலோசனைகள் இம் மையங்களில் வழங்கப்படும்.

விவசாயிகள்: கரம்பை மண் அள்ளுவதற்கு விவசாயிகளுக்கு அனுமதியளிப்பதில் பல்வேறு குளறுபடிகள் உள்ளன. சிலர் விண்ணப்பித்து ஓராண்டுகளாக அலைக்கழிக்கப்படும் நிலை உள்ளது.

அதிகாரிகள்: கரம்பை மண் அள்ளுவதற்கான அனுமதி விரைவாக கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாயிகள்: அரசு சார்பில் விலைநிர்ணய கொள்கை இல்லாததால் தக்காளி, வெண்டை உள்ளிட்ட காய்கனிகள் கடும் விலைவீழ்ச்சி கண்டு வருகின்றன. விவசாயிகள் உற்பத்திச் செலவைத் தாக்குப்பிடிக்க முடியாமல் தவிக்கிறார்கள். ஆகவே, மத்திய-மாநில அரசுகள் விலை நிர்ணயக் கொள்கையை அமல்படுத்த வேண்டும்.அதிகாரிகள்: இதுகுறித்து அரசுக்கு தெரிவிக்கப்படும்.

விவசாயிகள்: தாமிரவருணி-கருமேனியாறு மற்றும் நம்பியாறு நதிநீர் இணைப்புத் திட்டத்தை விரைவுப்படுத்தினால் வறட்சியான பகுதிகள் பாசன வசதி பெற வாய்ப்புக் கிடைக்கும்.

அதிகாரிகள்: இந்தத் திட்டத்தின் முதல் மற்றும் இரண்டாம் நிலை பணிகள் 99 சதவீதம் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதற்கான நிதி உதவியைப் பெற மத்திய நீர்வள ஆணையத்தின் கீழ் உள்ள 12 இயக்குநகரத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் விலைமதிப்பீடு மத்திய நீர்வள ஆணையத்தின் விலை மதிப்பீட்டு இயக்கக அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டு, இப்போது ரூ.872.45 கோடி (2014-15 ஆம் ஆண்டுக்கான விலை விவரப்பட்டியல்படி) மத்திய நீர்வள ஆணையத்தின் விலை மதிப்பீட்டு இயக்ககத்தால் இறுதி செய்யப்பட்டுள்ளது. கடந்த 25-5-2015 இல் நடைபெற்ற மத்திய நீர்வள ஆணையத்தின் தொழில்நுட்பக் குழுவின் கூட்டத்தில் இத்திட்டத்துக்கான விலை மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டு சுற்றுச்சூழல் தடைநீக்கச் சான்று பெற்று மத்திய நீர்வள ஆணையத்தின் தொழில்நுட்பக் குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அதன்பின்பு தில்லியில் கடந்த 16-7}2015 ஆம் தேதி நடைபெற்ற மத்திய நீர்வள ஆணையத்தின் தொழில்நுட்ப குழுவின் கூட்டத்தில் இத்திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஆகவே, 3 மற்றும் 4 ஆம்

நிலைப் பணிகள் மத்திய அரசின் நிதியுதவியுடனும், தமிழக அரசின் ஒப்புதலுடனும் விரைவில் செயல்படுத்தப்படும்.

விவசாயிகள்: செங்கோட்டை அருகேயுள்ள வடகரையில் விவசாயிகள் விளைநிலங்களுக்குச் செல்லும் முக்கியச் சாலையான கல்குளம் சாலையில் ஒருசாண் ஓடைப் பகுதியில் பாலம் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். இதே ஊரின் மேட்டுக்கால் சாலை நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் உள்ளது. இங்கு உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

## வேளாண்மை அறிவியல் நிலைய செயல்பாடுகள் ஆய்வு

திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் லட்சுமி வியாழக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார்.

வேளாண் அறிவியல் நிலையத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பருவநிலை மாற்றத்தை எதிர் கொள்ள மீள்தன்மையுள்ள தேசிய வேளாண்மை முனைப்புத் திட்டத்தின் கீழ் காட்டுசிவிரி கிராமத்தில் நடைபெற்று வரும் செயல் விளக்கப் பணிகளை பார்வையிட்டு விவசாயிகளிடையே மாவட்ட ஆட்சியர் லட்சுமி கலந்துரையாடினார்.

விழுப்புரம் மாவட்டத்தில் இத்திட்டத்தினை வேளாண்மை அறிவியல் நிலையத்தின் சார்பில் மயிலம் ஒன்றியம் காட்டுசிவிரி கிராமத்தில் 2010ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின் வாயிலாக புதிய அணுகுமுறைகள், திறன் ஆய்வு தகுதித் திறன் வளர்ப்பு,தொழில்நுட்ப மாற்றம் கொண்டு வரப்படுகின்றது.

இயற்கை வளங்களை உபயோகித்து வேளாண்மையில் முன்னேற்றங்களுக்கு முனைதல், பயிர் உற்பத்தி பெருக்கம்,கால்நடை பராமரிப்பு,நிறுவனங்களை மேம்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய செயல்பாடுகளாகும்.

இத்திட்டத்தின் கீழ் நில வளங்களை மேம்படுத்தும் பொருட்டு காட்டுச்சிவிரி கிராம மக்களுக்கு பண்ணை குட்டை அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. இக்கிராமம் முழுவதும் பயனடையும் நோக்கில் ரூ.8 லட்ம் மதிப்பீட்டில் நீர்வரத்தை தேக்கி வைக்கும் பொருட்டு ஏரி சீர்படுத்தப்பட்டுள்ளது.

வறட்சியைத் தாங்கி வளரக் கூடிய உளுந்து நிலக்கடலை, துவரம் பருப்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சியின் போது வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் சா.ஷீபா மற்றும் வேளாண் துறை அதிகாரிகள் பலர் உடனிருந்தனர்.

## இயந்திர நெல் நடவுக்கு அரசு மானியம்: வேளாண் உதவி இயக்குநர் தகவல்

இயந்திர நெல் நடவுக்கு அரசு சார்பில் மானியம் வழங்கப்படுவதாக வேளாண் உதவி இயக்குநர் கென்னடி ஜெபக்குமார் தெரிவித்தார்.

வேளாண் துறை சார்பில் இயந்திர நெல் நடவு குறித்த தொழில்நுட்ப கருத்தரங்கம் திண்டிவனம் வேளாண் துறை அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது. கூட்டத்துக்கு தலைமை வகித்து, வேளாண் உதவி இயக்குநர் கென்னடி ஜெபக்குமார் விவசாயிகளிடம் பேசியதாவது:

இந்திய அளவில் தமிழகம் நெல் உற்பத்தித் திறனில் முதன்மை மாநிலமாக விளங்குகிறது. வேளாண் துறையில் சீனாவில் நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் இயந்திரமாக்குதல் முழுமையாக கடைப்பிடிக்கப்படுவதால், இந்தியாவை விட அந்நாடு நெல் உற்பத்தித் திறனில் 2 மடங்கு அதிகமாக உள்ளது.

நெல் உற்பத்தித் திறன் இந்தியாவிலேயே தமிழகத்தில் அதிகமாக இருந்தாலும், நவீன தொழில்நுட்பங்கள், புதிய ரகங்கள், இயந்திரமாக்குதல் போன்ற தொழில்நுட்பங்களை முழுமையாக பயன்படுத்தினால் தற்போதைய மகசூலை விட 50 சதவீதம் அதிகமாக நெல் உற்பத்தித் திறன் பெற வாய்ப்புள்ளது.

நவீன தொழில்நுட்பங்கள், இயந்திரமாக்குதல், புதிய நெல் ரகங்களை முழுமையாக விவசாயிகள் கடைப்பிடித்தால் ஏக்கருக்கு 50 முதல் 60 மூட்டைகள் மகசூல் பெறலாம். நெல்லில் மகசூல் அதிகரித்திட இயந்திர நடவுமுறை முக்கியப் பங்கு வகிக்கிறது. இயந்திர நெல் நடவில் ஏக்கருக்கு 15 முதல் 20 கிலோ விதைகள் போதுமானது.

இயந்திர நெல் நடவு திட்டத்தை ஊக்குவித்திட தமிழக அரசு ஹெக்டேருக்கு ரூ.3 ஆயிரம் மானியம் வழங்குகிறது. இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் அதிகபட்சம் 2 ஹெக்டேர் வரை பயன்பெறலாம். கூடுதல் விவரங்களுக்கு வேளாண் துறை அலுவலகங்களை தொடர்பு கொள்ள வேண்டும் என்றார்.

கருத்தரங்கில் வேளாண் அலுவலர் எத்திராஜ், தொழில்நுட்ப மேலாளர் செந்தில்குமார், உதவி வேளாண் அலுவலர்கள் மோகன்குமார், விஜயலட்சுமி, யமுனா, சுரேஷ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**மீன் விற்பனைக்கூடப் பணிகள்: நகராட்சித் தலைவர் ஆய்வு**

கடலூர் நகராட்சிப் பகுதியில் பணிகள் நடைபெற்று வரும் மீன் விற்பனைக்கூடத்தை (சந்தை) நகராட்சித் தலைவர் ஆர்.குமரன் வெள்ளிக்கிழமை ஆய்வு செய்தார்.

கடலூர் நகராட்சிக்கு உள்பட்ட மஞ்சக்குப்பம் அண்ணா சந்தை, திருப்பாதிரிபுலியூர் பான்பரி சந்தை மற்றும் தேவனாம்பட்டினத்தில் மீன்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ஆனால் மீனவர்களுக்கு போதுமான மீன் விற்பனைக்கூடமாக அவைகள் இல்லாததால், சுகாதாரமான மீன் விற்பனைக்கூடம் அமைத்திட அரசு முடிவு செய்தது. அதன்படி, மேற்கண்ட 3 இடங்களிலும் மொத்தம் ரூ.2 கோடியில் மீன் விற்பனைக்கூடம் கட்டப்பட்டு வருகிறது.

இந்தக் கூடங்கள் மீன் விற்பனை செய்வதற்கான தனி இடம், மீன்களை சுத்தம் செய்யும் இடம், குளிர்பதன அறை மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு மையம் ஆகியவற்றுடன் அமைகிறது. இதில் கழிவுநீர் சுத்திகரிப்புக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் சில நாள்களில் முடிவடையும் என்று தெரிகிறது.

இந்நிலையில், இப்பணிகளை நகராட்சித் தலைவர் ஆர்.குமரன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது, பணிகளை விரைந்து முடித்திட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இப்பணிகள் முடிவுற்று ஒரு வாரத்துக்குள் சந்தை பயன்பாட்டுக்கு வந்துவிடுமெனத் தெரிவித்தார்.

ஆய்வின்போது நகராட்சி ஆணையர் ரா.முருகேசன், நகர்நல அலுவலர் எஸ்.முரளி, ஒப்பந்ததாரர் எம்.பஷீர் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கனமழை: ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து அதிகரிப்பு



பென்னாகரம்,

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்து வருவதால் கர்நாடக

அணைகளில் இருந்து ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து வினாடிக்கு 20 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

நீர்வரத்து அதிகரிப்பு

கர்நாடக மாநிலம் காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கடந்த ஒருவாரமாக கனமழை பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள கிருஷ்ணராஜசாகர், கபினி, ஹாரங்கி உள்ளிட்ட அணைகளுக்கு தண்ணீர் வரத்து படிப்படியாக அதிகரித்துள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து வினாடிக்கு 13 ஆயிரத்து 500 கனஅடியாக வந்து கொண்டு இருந்தது.]

இந்த நீர்வரத்தை பொதுப்பணித்துறை அதிகாரிகள் பிலிகுண்டுலுவில் கண்காணித்து வருகின்றனர்.நேற்று முன்தினம் வினாடிக்கு 15 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்தது. நேற்று காலை 19 ஆயிரத்து 300 கனஅடியாக வந்த தண்ணீர் வரத்து மேலும் அதிகரித்து மாலை 6 மணி நிலவரப்படி ஒகேனக்கல் காவிரி ஆற்றில் வினாடிக்கு 20 ஆயிரம் கனஅடியாக அதிகரித்தது.

ஒலிபெருக்கி மூலம்....ஒகேனக்கல் காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதால் மெயின் அருவி, சினிபால்ஸ், ஐந்தருவிகளில் தண்ணீர் செந்நிறத்தில் ஆர்ப்பரித்தும், நுங்கும் நுரையுடன் கொட்டுகிறது. இதனால் ஆற்றில் நீர்வரத்து நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தண்ணீர் வரத்து மேலும் அதிகரிக்கும் என்பதால் அருவிகளில் சுற்றுலா பயணிகள் பாதுகாப்பாக குளிக்க வேண்டும். தடை செய்யப்பட்ட பகுதிகளில் குளிக்கவும், பரிசல்கள் இயக்கவும் கூடாது என்று போலீசார் ஒலிப்பெருக்கி மூலம் அறிவுறுத்தி வருகின்றனர்.

இதையடுத்து ஆற்றுப்பகுதிகளில் போலீசார், தீயணைப்பு துறையினர், ஊர்க்காவல் படையினர், மீட்பு படையினர் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கர்நாடக அணைகளில் இருந்து கூடுதலாக தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால் காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து மேலும் அதிகரிக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## திருவள்ளூர், காஞ்சீபுரத்தில் பலத்த மழை-பொதுமக்கள் மகிழ்ச்சி



திருவள்ளூர்,

திருவள்ளூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளான திருப்பாச்சூர், திருமழிசை, பேரம்பாக்கம், கடம்பத்தூர், திருவாலங்காடு பகுதிகளில் பலத்த மழை பெய்தது. காஞ்சீபுரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளான முத்தியால்பேட்டை, வாலாஜாபாத், உத்திரமேரூர் பகுதிகளிலும் பலத்த மழை பெய்தது.இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## வேளாண்மை–தோட்டக்கலைத்துறை வளர்ச்சிப்பணிகள் கலெக்டர் ஆய்வு



நாகர்கோவில்,

வேளாண்மைத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறை வளர்ச்சிப்பணிகளை கலெக்டர் சஜ்ஜன்சிங் சவான் ஆய்வு செய்தார்.

ஆய்வு

ராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் வேளாண்மைத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறை மூலம் நடைபெற்று வரும் வளர்ச்சிப்பணிகள் குறித்து கலெக்டர் சஜ்ஜன்சிங் சவான் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது கலெக்டர் சஜ்ஜன்சிங் சவான் கூறும்போது, "தமிழக முதல்–அமைச்சர் விவசாயிகள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து அத்திட்டங்களுக்கு மானியங்கள் வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் இதுபோன்ற திட்டங்கள் மூலம் மானியம் பெற்று தொழிற்சாலை அமைத்திட முன்வர வேண்டும்''என்றார்.

அதன் பின்னர் ராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இருளப்பபுரம் ஊராட்சி பகுதியில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) திட்டத்தின்கீழ் ராதாகிருஷ்ணன் என்ற விவசாயியின் நிலத்தில் பட்டுப்புழு வளர்ப்பு பணிகளை பார்வையிட்டார். அதையடுத்து மேலகிருஷ்ணன்புதூரில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் ரூ.2 லட்சம் மானியத்துடன் தென்னை நார் மதிப்பு கூட்டுதல் தொழிற்சாலையை ஆய்வு செய்தார்.

அப்போது திரவியம் என்ற விவசாயி “கதம்பல் மூலம் குட்டை நார், நெட்டை நார் மற்றும் தூள் போன்றவற்றை தனியாக பிரித்து ஸ்பெயின், ஜெர்மன், கொரியா, நெதர்லாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. ஒரு மெட்ரிக் டன் தூள் ரூ.12 ஆயிரம் முதல் ரூ.14 ஆயிரம் வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்த தூளானது செடிகள் நடுவதற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றார்.

மண்புழு தயாரிப்புக் கூடம்

அதன்பிறகு அட்மா திட்டத்தின்கீழ் வேளாண்மை விற்பனைத்துறையால் ஈத்தாமொழி பூமிபாதுகாப்பு சங்கத்தில் நடத்தப்படும் விவசாயிகளுக்கான தேங்காய் மதிப்பு கூட்டுதல் செயல்விளக்க பயிற்சியில் கலந்து கொண்டார். புதூர் பகுதியில் நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தின்கீழ் வேளாண்மைத்துறையால் கனகசபை என்ற விவசாயியின் நிலத்தில் ரூ.50 ஆயிரம் மானியத்தில் அமைக்கப்பட்டுள்ள மண்புழு உர தயாரிப்பு கூடத்தையும், தோட்டக்கலைத்துறையால் அரசு என்ற விவசாயியின் நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள மிளகு பரப்பு விரிவாக்கப் பணிகளையும், பூச்சிக்காடு வேளாண்மைத்துறையால் மணிகண்டன் என்ற விவசாயியின் நிலத்தில் நடத்தப்படும் உளுந்து பயிருக்கான டி.ஏ.பி. உர கரைசல் தெளித்தல் செயல்விளக்கத்தையும், தெளிப்புநீர் பாசன அமைப்பையும், கார்த்திகைவடலி வேளாண்மை பொறியியல்துறையால் மீனாட்சிசுந்தரம் என்ற விவசாயியின் தோட்டத்தில் வரப்பு அமைக்கும் கருவி செயல்விளக்கத்தையும்,

தோட்டக்கலைத்துறையால் அமைக்கப்பட்டுள்ள திசு வாழை வளர்ப்பு, செம்மட்டி ரக வாழை வளர்ப்பு, வாழைக்குலைகளில் யூரியா கரைசல் கட்டுதல் செயல்விளக்கத்தினையும், தம்மத்துகோணத்தில் தோட்டக்கலைத்துறையால் தனபால் என்ற விவசாயியின் தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள மிளகு பரப்பு விரிவாக்கம் பல அடுக்கு சாகுபடி,

ஒருங்கிணைந்த பண்ணை ஆகியவற்றையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.இந்த ஆய்வின்போது வேளாண்மைத்துறை இணை இயக்குனர் இளங்கோ, வேளாண்மை துணை இயக்குனர் (மத்திய திட்டம்) சந்திரசேனன் நாயர், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) நிஜாமுதீன், வேளாண்மை துணை இயக்குனர்கள் ஆனந்தராஜா, சிவக்குமார், வேளாண்மை உதவி இயக்குனர் வாணி, தோட்டக்கலை உதவி இயக்குனர் அசோக் மேக்ரின் (ராஜாக்கமங்கலம்), தோட்டக்கலை உதவி இயக்குநர் கண்ணன் (குருந்தன்கோடு) மற்றும் தோட்டக்கலைத்துறை, வேளாண்மை பொறியியல் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## வேளாண்மைத்துறையின் மூலம் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் ஜெயந்தி தலைமையில் நடந்தது



கரூர்,

வேளாண்மைத்துறையின் மூலம் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் ஜெயந்தி தலைமையில் நடந்தது.

குறைதீர்க்கும் நாள் கூட்டம்

கரூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் வேளாண்மைத்துறையின் மூலம் மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் ஜெயந்தி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் விவசாயிகளிடம் கோரிக்கை மனுக்கள் பெற்று மனுதாரர் முன்னிலையில் விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க அலுவலர்களுக்கு கலெக்டர் ஜெயந்தி உத்திரவிட்டு பேசினார். அப்போது அவர் பேசியதாவது:–

கரூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 652.2 மில்லி மீட்டர் ஆகும். நடப்பு மாதம் முடிய கிடைக்க வேண்டிய சராசரி மழையான 248.70 மில்லி மீட்டருக்கு இதுவரை 322.57 மில்லி மீட்டர் மழை கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த மழையை பயன்படுத்தி மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் சிறுதானியபயிர்கள் 1,834 எக்டரும், பயிறு வகை பயிர்கள் 121 எக்டரும், எண்ணெய்வித்து பயிர்கள் 960 எக்டரும் மற்றும் கரும்பு 2,019 எக்டரிலும் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இருப்பு

அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் சான்று பெற்ற நெல் ரக விதைகளான பி.பி.டி–5204, கோ–50 ஆகியவைகள் 160 மெகா டன் இருப்பு வைக்கப்பட்டு இதுவரை 30 மெகா டன் வரை வினியோகம் செய்யப்பட்டுள்ளது. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்– நெல் இயக்கத்தின் மூலம் 10 ஆண்டுகளுக்கு குறைவாக உள்ள ரகங்களுக்கு மட்டும் கிலோ ஒன்றுக்கு ரூ.10 மானியத்தில் விவசாயிகளுக்கு வினியோகிக்க தயார் நிலையில் உள்ளது. சிறுதானிய இயக்கத்தின் மூலம் சான்று பெற்ற ராகி ரக விதை பீரு–67 மற்றும் வரகு ரக விதை

கோ–9 ஆகிய பயிர் விதைகள் 1.5 மெகா டன் ரூ.15 மானியத்தில் வழங்கப்பட உள்ளது. மேலும், பயறுவகை விதைகளான கோ (ஆர்.ஜி)–7, எல்.ஆர்.ஜி–41 ஆகிய துவரை ரகங்களும், வம்பன்–5 உளுந்து விதைகளும் ஆகியவை மொத்தம் 12.468 மெகா டன் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம், பயறுவகை திட்டத்தின் கீழ் ஒரு கிலோவிற்கு ரூ.25 மானியத்தில் வினியோகம் செய்வதற்கு அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இருப்பில் உள்ளது. எண்ணெய் வித்துப்பயிரான நிலக்கடலையில் கே–6 மற்றும் டிஎம்வி–7 சான்று பெற்ற விதைகள் 8.474 மெகா டன் இருப்பில் உள்ளது.

துவரை நாற்று

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் இயந்திரம் மூலம் நெல் நடவு மேற்கொண்டு நெற்பயிரில் செயல்விளக்கங்கள் அமைக்க பின்முடிவு மானியமாக எக்டருக்கு ரூ.3,000 வீதம் 2,800 எக்டருக்கு வழங்கப்பட உள்ளது மற்றும் இத்திட்டத்தின் கீழ் துவரை நாற்று விட்டு சாகுபடி செய்ய பின்முடிவு மானியமாக எக்டருக்கு ரூ.2,500 வீதம் 350 எக்டருக்கு வழங்கப்பட உள்ளது எனவே, தேவைப்படும் விவசாயிகள் சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி பயனடைய வேண்டும்.

இலக்கு

மேலும், கரூர் மாவட்டத்தில் சாகுபடி செய்யும் பயிர்களில் அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மைத் திட்டம் 2015–16–க்கான செயல்விளக்கம் 10 எண்களுக்கு 0.30 லட்சம் நிதி இலக்கு பெறப்பட்டு செயல்விளக்கம் நடைபெறும் இடங்கள் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. சோலார் உலர்த்தி அமைத்தல் 2015–16–ம் ஆண்டிற்கு 7 எண்களுக்கு ரூ.12 லட்சத்து 88 ஆயிரம் மானியம் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தில்

சோலார் உலர்த்தி அமைக்க 2 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 5 பயனாளிகள் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. எனவே, தேவைப்படும் விவசாயிகள் சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளரை அணுகி பயனடைய வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இதில் மாவட்ட வருவாய் அலுவலர் அருணா, கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் சந்தானம், வேளாண்மை இணை இயக்குனர் மாது, மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) மதனகோபால், முன்னோடி விவசாயிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்பட பலர் கலந்துக் கொண்டனர்.

## முட்டை உற்பத்தி மீண்டும் இயல்பு நிலையை அடைய வாய்ப்பு உள்ளது ஆராய்ச்சி நிலையம் தகவல்



முட்டை உற்பத்தி மீண்டும் இயல்பு நிலையை அடைய வாய்ப்பு உள்ளது என ஆராய்ச்சி நிலையம் சார்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

ஆராய்ச்சி நிலையம்

நாமக்கல் மாவட்டத்தில் இன்று முதல் அடுத்த 4 நாட்களுக்கு நிலவும் வானிலை குறித்து கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளியிடப்பட்டு உள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- அடுத்த 4 நாட்கள் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். இன்று 12 மி.மீட்டரும், நாளை 5 மி.மீட்டரும் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. காற்று மணிக்கு 8 கி.மீ. வேகத்தில் தெற்கு திசையில் இருந்து வீசும். வெப்பநிலையை பொறுத்த வரையில் அதிகபட்சமாக 96.8 டிகிரியாகவும், குறைந்தபட்சமாக 77 டிகிரியாகவும் இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிகபட்சமாக முறையே 88, 85, 80, 78 சதவீதமாகவும்,

குறைந்தபட்சமாக 55, 52, 45, 40 சதவீதமாகவும் இருக்கும். கிருமி நாசினிதென்மேற்கு பருவமழையின் தாக்கம் சற்று தீவிரம் அடைந்துள்ளதாலும் பகல் மற்றும் இரவு வெப்ப அளவுகள் குறைந்தும், இதன் காரணமாக தீவன எடுப்பு கோழிகளில் இயல்பாக காணப்படும். கடந்த இரு வாரங்களாக நிலவி வந்த வெயிலின் காரணமாக குறைந்து காணப்பட்ட தீவன எடுப்பு மீண்டும் உயர்ந்தும், அதனால் குறைந்த முட்டை உற்பத்தி மீண்டும் இயல்பு நிலையை அடைய வாய்ப்பு உள்ளது. தீவன மூலப்பொருட்களில் குறிப்பாக மக்காச்சோளம் மற்றும் சூரியகாந்தி புண்ணாக்கு ஆகியவற்றில் பூஞ்சான நச்சு பரிசோதனை செய்த பின்னர் பயன்படுத்துவது நல்லது.

கடந்த வாரம் கோழியின நோய் ஆய்வகத்தில் ஆய்வு செய்யப்பட்ட இறந்த கோழிகள் பெரும்பாலும் வெப்ப அயற்சி மற்றும் ஈகோலை, மேல் மூச்சுக்குழாய் நோய்களினால் இறந்து இருப்பது தெரியவந்து உள்ளது. எனவே பண்ணையாளர்கள் கோழிகளுக்கு அளிக்கப்படும் தீவனம் மற்றும் குடிநீரில் ஈகோலை கிருமிகளின் மாசுபாடு உள்ளதா? என ஆய்வகத்தில் ஆய்வு செய்து, அதற்கு தகுந்தாற்போல் கிருமிநாசினி மருந்துகளை உபயோகிப்பதுடன், பண்ணை சுகாதார மேலாண்மை முறைகளை கடைபிடிக்க வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

## தேங்காய் பருப்பு விலை சரிவு விவசாயிகள் கவலை




பரமத்திவேலூரில் தேங்காய் பருப்பு விலை சரிவு அடைந்ததால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர். தேங்காய் பருப்பு நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் தாலுகாவில் பரமத்தி, வசந்தபுரம், கபிலர்மலை, ஜேடர்பாளையம், சோழசிராமணி, கொத்தமங்கலம், பிலிக்கல்பாளையம், பாண்டமங்கலம், பாலப்பட்டி உள்ளிட்ட காவிரி கரையோர பகுதிகளில் விவசாயிகள் அதிக அளவில் தென்னை மரங்களை வளர்த்து வருகின்றனர். இந்த மரங்களில் இருந்து கிடைக்கும் தேங்காய் பருப்புகள் விவசாயிகள் மூலம் கொண்டு வரப்பட்டு பரமத்திவேலூர் பொத்தனூர் வெங்கமேட்டில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வாரந்தோறும் வியாழக்கிழமை ஏலம் விடப்படுகிறது. ஏலம் முடிந்ததும் விவசாயிகளுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது.

விலை சரிவு

சென்ற வாரம் நடைபெற்ற ஏலத்திற்கு 1,537 கிலோ தேங்காய் பருப்புகள் வந்து இருந்தது. இவை அதிகபட்சமாக கிலோ ரூ.74.45- க்கும், சராசரியாக ரூ.72.68- க்கும், குறைந்தபட்சமாக ரூ.70.90-க்கும் ஏலம்

போனது.

இந்த வாரம் நடைபெற்ற ஏலத்திற்கு 1,365 கிலோ தேங்காய் பருப்புகள் ஏலத்திற்கு வந்து இருந்தது. இவை அதிகபட்சமாக கிலோ ரூ.72.51-க்கும், சராசரியாக ரூ.70.60-க்கும், குறைந்தபட்சமாக ரூ.68.69-க்கும் ஏலம் போனது. இந்த வாரம் தேங்காய் பருப்பு வரத்தும் குறைந்ததோடு, ஏலமும் குறைந்த தொகைக்கு போனது. கடந்த 2 வாரங்களாக தேங்காய் பருப்பின் விலை உயர்ந்து வந்த நிலையில் இந்த வாரம் விலை சரிவு அடைந்ததால் தென்னை விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

**வீடுகள், அலுவலகங்களில் மாடித் தோட்டம் அமைக்க பேரூராட்சிகளின் இயக்குனர் உத்தரவு முதற்கட்டமாக டி.கல்லுப்பட்டியில் அமைக்கப்பட்டது**




பேரூராட்சிகளில் முதற்கட்டமாக வீடுகள், பேரூராட்சி அலுவலக கட்டிடங்களில் மாடித் தோட்டம் அமைக்க வேண்டும் என்று

பேரூராட்சிகளின் இயக்குனர் உத்தரவிட்டுள்ளார். அதன்படி டி.கல்லுப்பட்டி பேரூராட்சி அலுவலகத்தில் பூந்தோட்டம், காய்கறித்தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

<u>முதற்கட்டம்</u>

தமிழ்நாட்டில் 528 பேரூராட்சிகள் உள்ளன. இவற்றில் மாடித் தோட்டம் மற்றும் வீடுகளில் காலியாக உள்ள இடங்களில் தோட்டங்கள் அமைத்து திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை செயல்படுத்த பேரூராட்சிகளின் இயக்குனர் ராஜேந்திர ரத்னு உத்தரவிட்டுள்ளார். அதன்படி அவர் அறிவித்துள்ளதாவது:– தமிழகத்தில் உள்ள அனைத்து பேரூராட்சிகளிலும் முதற்கட்டமாக அலுவலக மாடிகளில், பேரூராட்சிகளில் தயாரிக்கப்பட்ட இயற்கை உரங்கள் மூலம் காய்கறிகள், பூஞ்செடிகள் வளர்க்க வேண்டும்.

ஒவ்வொரு பேரூராட்சி வார்டுகளிலும் தலா 5 வீடுகளை தேர்வு செய்து மாடித் தோட்டம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் வீடுகளின் பின்புறம் உள்ள காலி இடங்களில் மக்கும் குப்பைகளில் இருந்து உரம் தயாரித்து தோட்டங்கள் அமைக்கவும் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

<u>பூந்தோட்டங்கள்</u>

இந்த திட்டத்தின் மூலம் பேரூராட்சி நிர்வாகமும், தோட்டக்கலை துறையும் இணைந்து தேர்வு செய்யும் வீடுகளுக்கு தொழில்நுட்பம், உரங்கள் தயாரிக்கும் முறைகளுக்கான வசதிகள் அமைக்கப்பட உள்ளன. பேரூராட்சிகளை அழகுபடுத்தவும், சுற்றுப்புற சூழலை பாதுகாக்கவும் இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

பேரூராட்சிகளின் இயக்குனர் உத்தரவுப்படி முதற்கட்டமாக டி.கல்லுப்பட்டி பேரூராட்சி அலுவலகத்தில் இயற்கை உரங்களால்

பூந்தோட்டங்கள், காய்கறி தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இதுபற்றி பேரூராட்சித் தலைவர் மாணிக்கம் கூறுகையில், ‘டி.கல்லுப்பட்டி பேரூராட்சியில் உள்ள 15 வார்டுகளில் தலா 5 வீடுகள் வீதம் 75 வீடுகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அந்த வீடுகளுக்கு தொழில்நுட்ப உதவிகள், உரங்கள் வழங்கப்பட்டு உள்ளன’ என்றார். அப்போது நிர்வாக அதிகாரி கலையரசி மற்றும் பணியாளர்கள் உடன் இருந்தனர்.

## உழவர்களுக்கான முன்பருவ விழிப்புணர்வு பெருவிழா 24–ந்தேதி நடக்கிறது




ராமநாதபுரத்தில் வருகிற 24–ந்தேதி உழவர்களுக்கான முன்பருவ விழிப்புணர்வு பெருவிழா நடைபெற உள்ளது.

<u>கலந்துரையாடல்</u>

புதுடெல்லி இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகம், மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில் வருகிற 24–ந்தேதி காலை 9.30 மணிக்கு வேளாண் முன்பருவ விழிப்புணர்வு பெருவிழா ராமநாதபுரம் கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள கடலோர உவர் ஆராய்ச்சி மையம் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலைய அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இந்த விழாவில் நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் பற்றிய செயல்விளக்கங்கள் மற்றும் வேளாண் வல்லுனர்களுடன் கலந்துரையாடல் நடைபெறும். அப்போது ராமநாதபுரம் மாவட்டத்துக்கு ஏற்ற நெல் ரகங்களின் விதைகள், தீவனப் பயிர்களுக்கான விதை பொருட்கள், காய்கறி விதைகள், நாற்றுகள் மற்றும் சிறுதானிய உணவுபொருட்களை விற்பனை செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டு

உள்ளது. உழவர்கள் பயன்பெறும் வண்ணம் கருத்துக்காட்சிகள் அமைக்கப்பட்டு உள்ளன.

இதுதவிர மாடித்தோட்டம் அமைத்தல் பற்றிய விளக்கம், அதற்கான இடுபொருட்கள் வினியோகம் மற்றும் வேளாண் எந்திரங்களின் கண்காட்சியும் நடைபெற உள்ளது. வேளாண்மை சார்ந்த அனைத்து முக்கிய அரசு அலுவலர்களும் இதில் கலந்து கொண்டு உழவர்களுக்கு தகுந்த ஆலோசனை வழங்க உள்ளனர்.

<u>விவரம்</u>

எனவே இந்த விழாவில் உழவர்கள் பெருமளவில் கலந்து கொண்டு பயன்பெறலாம். இதுதொடர்பான விவரங்களை திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண்மை அறிவியல் நிலையம், கடலோர உவர் ஆராய்ச்சி மையம், மாவட்ட கலெக்டர் வளாகம், ராமநாதபுரம் என்ற முகவரியிலோ, 04567–230250, 232639 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். இந்த தகவலை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் சீகன்பால் தெரிவித்தார்.

## சுபநிகழ்ச்சிகள் தொடங்கி விட்டதால் கீரமங்கலம் பகுதியில் ஒரு வாழை இலை ரூ.5-க்கு விற்பனை



கீரமங்கலம்,

சுபநிகழ்ச்சிகள் தொடங்கி விட்டதால், கீரமங்கலம் பகுதியில் ஒரு வாழை இலை ரூ.5-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வாழை இலை

திருமணம், காதணி விழா, மொய்விருந்து மற்றும் ஒவ்வொருவர் வீட்டிலும் விருந்தினர்களுக்கு விருந்து கொடுக்கும்போது வாழை இலையில் உணவு பதார்த்தங்களை பரிமாறுவது தமிழர்களின் பண்பாடு, கலாச்சாரத்தில் ஒன்றாக அமைந்துவிட்டது. ஆனால் இன்று நகரங்களில் மட்டுமின்றி, கிராமங்களிலும் வீட்டுக்கு வரும் விருந்தினர்களுக்கு எவர்சில்வர் தட்டுகளில் உணவளிக்கும் பழக்கமும், விருந்துகளுக்கு காகித இலைகள் போடும் பழக்கமும் பரவ தொடங்கிவிட்டது.

ஆனாலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் பெரும்பாலும் வீட்டில் உள்ளவர்கள் மற்றும் விருந்தினர்களுக்கு வாழை இலையிலேயே உணவளிப்பது இன்னும் மாறவில்லை. கீரமங்கலம், வடகாடு, கொத்தமங்கலம், மேற்பனைக்காடு, குளமங்கலம் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் வாழை தோட்டங்கள் அதிகமாக இருந்தன. அதனால் வாழை இலை உள்ளூர் தேவைகளுக்கு மட்டுமின்றி வெளியூர்களுக்கும் விற்பனைக்கு போனது. ஆனால் அந்த காலம் மாறி, கடந்த சில ஆண்டுகளாக வெளியூர்களில் இருந்து வாழை இலை வாங்கி வந்து விருந்துக்கு பயன்படுத்தும் நிலை வந்துவிட்டது.

ஒரு இலை ரூ.5-க்கு விற்பனை

கடந்த சில மாதங்களில் கீரமங்கலம், வடகாடு சுற்று வட்டாரத்தில் சுமார் 50 கிராமங்களில் தினமும் 50 மொய் விருந்துகள் நடைபெற்றன. இதனால் அந்த நேரத்தில் இப்பகுதிக்கு மட்டுமே இலை தேவை இருந்ததால் ஒரு வாழை இலை விலை ரூ.1.50 முதல் ரூ.2 வரை மட்டுமே விற்பனை செய்யப்பட்டது.

ஆனால் ஆவணி மாதம் பிறந்ததும் தமிழகம் முழுவதும் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் தொடங்கி விட்டதால் சில நாட்களுக்குள் ஒரு வாழை இலையின் விலை உயர்ந்து ரூ.5-க்கும் விற்பனை செய்யப்படுகிறது. தொழிலாளிகளால் நறுக்கப்பட்ட வாழை இலை ஒன்றுக்கு ரூ.5 கொடுத்து வாங்குவதால், அதற்கே ஒரு குறிப்பிட்ட தொகை ஒதுக்க வேண்டும் என்று சுப நிகழ்ச்சிகளை நடத்துபவர்கள் கூறுகிறார்கள். இதனால் பல இடங்களில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும் திருமண மண்டபங்களில் விருந்துக்கு காகித இலைகளை பயன்படுத்த பொதுமக்கள் தொடங்கி விட்டனர்.

## தேவாரம் பகுதியில் வெள்ளரி விலை திடீர் வீழ்ச்சி கொடியில் பறிக்காமல் விடும் அவலம்



தேவாரம்,

தேவாரம் மார்க்கெட்டில் வெள்ளரி விலை திடீரென்று வீழ்ச்சி அடைந்து உள்ளது. இதனால் தோட்டத்தில் விளைந்த வெள்ளரியை பறிக்காமல் விடும் அவல நிலை ஏற்பட்டு உள்ளது.

ஓணம் பண்டிகை

தேனி மாவட்டம் தேவாரம் பகுதிகளான தே.மீனாட்சிபுரம், ரெங்கநாதபுரம், தம்மிநாயக்கன்பட்டி, பொட்டிப்புரம், தே.சிந்தலைச்சேரி, மேலச்சிந்தலைச்சேரி, லட்சுமிநாயக்கன்பட்டி, அழகர்நாயக்கன்பட்டி, பல்லவராயன்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் கிணற்று பாசனம் மூலம் காய்கறி விவசாயம் அதிக அளவில் நடந்து வருகிறது. இங்கு விளையும் காய்கறிகள் தேவாரம் மார்க்கெட்டுக்கு மற்றும் கேரளாவுக்கு

விற்பனைக்கு அனுப்பபடுகிறது. கேரள மாநிலத்தில் நடைபெறும் ஓணம் பண்டிகைக்காக தேவாரம் பகுதியில் சாம்பார் வெள்ளரி அதிக அளவில் பயிரிடப்பட்டது.

மார்க்கெட்டில் சாம்பார் வெள்ளரி விலை குறைந்து ஒரு கிலோ ரூ.2-க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனால் கூலிவேலைக்கு வரும் ஆட்களுக்கு கூட சம்பளம் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. இதன் காரணமாக வெள்ளரியை பறிக்காமல் தோட்டத்திலேயே விட்டு விட்டனர். அவை பழுத்து நாசமாகி வருகிறது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்து வருகின்றனர்.

விலை வீழ்ச்சி

இதுகுறித்து விவசாயிகளிடம் கேட்ட போது, 'கேரளாவில் நடைபெறும் ஓணம் பண்டிகையையொட்டி சாம்பார் வெள்ளரிக்கு கூடுதல் விலை கிடைக்கும் என்ற நோக்கத்தில் விவசாயம் செய்தோம். மார்க்கெட்டில் வெள்ளரி விலை திடீரென்று வீழ்ச்சி அடைந்தது. காரணம் தற்போது வெளிமாவட்டங்களில் இருந்து அதிக அளவில் சாம்பார் வெள்ளரி வரத்து இருப்பதால் விலை குறைவு ஏற்பட்டுள்ளது' என்றனர்.

## ஆற்காட்டில் 68 மில்லி மீட்டர் பதிவு: மாவட்டம் முழுவதும் பலத்த மழை


அணைக்கட்டுமாவட்டம் முழுவதும் பலத்த மழை பெய்தது. அதிகபட்சமாக ஆற்காட்டில் 68 மில்லி மீட்டர் மழை பதிவானது. அணைக்கட்டு அருகே மின்னல் தாக்கியதில் கோழிப்பண்ணை எரிந்து நாசமானது.

<u>இடி, மின்னலுடன் பலத்த மழை</u>

வேலூர் மாவட்டத்தில் அக்னி வெயில் முடிவடைந்த நிலையிலும், வெயிலின் தாக்கம் குறையாமல் இருந்தது. இதனால் பொதுமக்கள் கடும் அவதிப்பட்டு வந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு 8 மணி அளவில் இடி, மின்னலுடன் மழை பெய்ய தொடங்கியது. தொடர்ந்து 12 மணி வரை பலத்த மழை பெய்தது. அதன் பின்னர் நேற்று காலை வரை விட்டு விட்டு சாரல் மழை பெய்தது. இந்த மழையால் வேலூரின் பல்வேறு இடங்களில் வெள்ளம் கரை புரண்டு ஓடியது. புதிய, பழைய பஸ் நிலையம் உள்பட பல்வேறு இடங்களில் தண்ணீர் தேங்கியதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதனால் இருசக்கர வாகன ஓட்டிகள் கடும் அவதி அடைந்தனர்.

இதே போல் ஆம்பூர், ஆற்காடு, வாலாஜா, அரக்கோணம், திருப்பத்தூர், காவேரிப்பாக்கம், சோளிங்கர் உள்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. இதனால் பொதுமக்கள் மற்றும்

விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். வேலூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக ஆற்காட்டில் 68 மில்லி மீட்டர் மழை பதிவானது.

<u>கோழிப்பண்ணை எரிந்தது</u>

அணைக்கட்டை அடுத்த சின்ன அணைக்கட்டு கிராமத்தை சேர்ந்தவர் கோவிந்தசாமி (வயது 55). அந்த பகுதியில் கோழிப்பண்ணை வைத்துள்ளார். நேற்று முன்தினம் இரவு 8 மணி அளவில் அணைக்கட்டு பகுதியில் இடி, மின்னலுடன் மழை பெய்தது. அப்போது கோழிப்பண்ணையில் தென்னை கீற்றால் அமைக்கப்பட்டிருந்த கொட்டகை மீது மின்னல் தாக்கியது. இதில் கொட்டகை தீப்பற்றி எரிந்தது. இதுகுறித்து பொதுமக்கள் ஒடுகத்தூர் தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தனர்.

அதன்பேரில் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். சுமார் 1 மணி நேரம் போராடி தீயை அணைத்தனர். தற்போது பண்ணையில் கோழிகள் வளர்க்கப்படாததால் பெரும் சேதம் ஏற்படவில்லை.

இதுபற்றி தகவல் அறிந்ததும் கலையரசு எம்.எல்.ஏ. நேற்று காலை கோழிப்பண்ணைக்கு நேரில் சென்று பார்வையிட்டு, உரிய இழப்பீட்டு தொகை பெற்று தரப்படும் என்று கோவிந்தசாமியிடம் கூறினார். அப்போது தாசில்தார் சரஸ்வதி மற்றும் வருவாய்துறையினர் உடன் இருந்தனர்.

<u>மழை அளவு விவரம்</u>

வேலூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு 8 மணி முதல் நேற்று காலை 6 மணி வரை பெய்த மழை அளவு விவரம் மில்லி மீட்டரில் வருமாறு:– வேரிப்பாக்கம் –45.8, வேலூர் –32, குடியாத்தம் –4.3, மேல்ஆலத்தூர் –6.8, ஆலங்காயம் –2, ஆம்பூர் –8, வாலாஜா –20.2, சோளிங்கர் –16, அரக்கோணம் –45.5. ஆற்காடு– 68.

# தினகரன்

## சுற்றுலாவை மேம்படுத்த தெலுங்கானாவுக்கு ரூ.100 கோடி நிதி




ஐதராபாத்: தெலுங்கானா மாநிலத்தில் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக மத்திய அரசின் சுற்றுலாத்துறை ரூ. 99.86 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த நிதியைக் கொண்டு தெலுங்கானா மாநிலத்தில் உள்ள மெகபூப்நகர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் வழித்தடம் மேம்படுத்தப்பட உள்ளது. வனங்கள், புலிகள் சரணாலயம், வனவிலங்குகள், நீர்வீழ்ச்சிகள், குகைகள், பண்டைய கோயில்கள் நிறைந்த வழித்தடம் ஒன்றில் சுற்றுலாவுக்கான வசதிகளை தெலுங்கானா சுற்றுலா வாரியம் மேம்படுத்தும் என்று தெரிவித்துள்ளது. மேலும் சிங்கோட்டம் என்ற இடத்தில் நீர் விளையாட்டு தொகுப்பு ஒன்றையும் அது அமைக்கவுள்ளது. இந்த வழித்தடம் ஐதராபாத் நகரம்

மற்றும் முக்கிய தேசிய நெடுஞ்சாலைகளை இணைக்கும் வகையில் உருவாக்கப்படும்.

தெலுங்கானா மாநில சுற்றுலா மேம்பாட்டு கழகத்தின் தலைவர் பெர்வாரம் ராமுலு மற்றும் சுற்றுலாத் துறையினர் உருவாக்கிய இந்தத் திட்டத்திற்கு ஸ்வதேஷ் தர்சன் இயக்கம் 2015-ன் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக சுற்றுலா வாரியத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது. புது டெல்லியில் சமீபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**விவசாயிகள் தற்கொலை முற்றிலும் நீங்க வேண்டும் : உச்சநீதிமன்றம் கருத்து**



புதுடெல்லி: நாட்டில் விவசாயிகள் தற்கொலைமுற்றிலும் நீங்க வேண்டும் என உச்சநீதிமன்றம் கூறியது. விவசாயிகள் தற்கொலைகளை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கக் கோரும் பொது நல வழக்கு ஒன்று உச்சநீதிமன்றத்தில் சமூக நீதிக்கான அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. இந்த மனுவை நீதிபதிகள் மதன் பி லோகுர் மற்றும்  யு யு லலித் விசாரித்தனர். மத்திய அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞர் பிங்கி

ஆனந்த், விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்கள் வெகுவாக குறைந்திருப்பதாக தெரிவித்தார். இதில் திருப்தியடையாத நீதிபதிகள் அது போதாது என்றும் விவசாயிகள் தற்கொலையே முற்றிலும் நீங்க வேண்டும் என்று கூறினார்கள். கடந்த 2007ம் ஆண்டு வகுக்கப்பட்ட தேசிய விவசாயிகள் கொள்கையில் உள்ள சில குறைபாடுகளுடன் விவசாயிகள் தற்கொலைக்கு தொடர்பிருக்கலாம் என்பதால் அந்தக் கொள்கையை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்றும் அது தொடர்பாக அரசின் கருத்தை ஆறு வார காலத்திற்குள் தெரிவிக்குமாறும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

விவசாயிகள் பிரச்னைகள் குறித்து வேளாண் விஞ்ஞானி எம் எஸ் சுவாமிநான் தலைமையில் ஆண்டுக்கு ஒருமுறை நடத்தப்படும் கூட்டத்தை குறைந்த இடைவெளியில் நடத்தலாம் என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர். விவசாயிகள் தற்கொலைக்கு விவசாய கடன் உள்ளிட்ட பிரச்சனைகள் மட்டும் காரணமல்ல என்றும் வேறு சில காரணங்களும் இருப்பதாக தேசிய குற்ற ஆவண காப்பகம் கூறியிருப்பதை நீதிபதிகள் சுட்டிக்காட்டினார்கள். இதே கருத்தை சமீபத்தில் கூறிய மத்திய வேளாண் துறை அமைச்சர் ராதா மோகன் சிங் சர்ச்சையில் சிக்கியது குறிப்பிடத்தக்கது.

**முல்லைப்பெரியாறு அணையில் துணை கண்காணிப்பு குழுவினர் திடீர் ஆய்வு**




தேனி: முல்லைப்பெரியாறு அணையில் துணை கண்காணிப்பு குழுவினர் திடீரென்று ஆய்வு மேற்கொண்டனர். தேனி, திண்டுகள், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களின் நீர் ஆதாரமாக முல்லைப்பெரியாறு அணை திகழ்கிறது. உச்சநீதிமன்ற உத்தரவு படி அமைக்கப்பட்ட மூவர் கண்காணிப்பு குழுவினரும், துணை கண்காணிப்பு குழுவினரும் இந்த அணையில் அவ்வப்போது ஆய்வு செய்து வருகின்றனர். மூவர் கண்காணிப்பு குழுவினர் உத்தரவு படி துணை கண்காணிப்பு குழுவினர் ஆய்வு செய்து அறிக்கை அளித்து வருகின்றனர். இந்நிலையில் முல்லைப்பெரியாறு அணையில் துணை கண்காணிப்பு குழுவினர் உடனே சென்று ஆய்வு செய்து நீர் மாதிரியை சேகரித்து ஆய்வுக்கு அனுப்புமாறு மூவர் கண்காணிப்பு குழுவின் தலைவர் நாதன் உத்தரவிட்டதாக தெரிகிறது. அதன் பேரில் துணை கணகாணிப்பு குழுவினர் முல்லைப்பெரியாறு அணையில் நேற்று திடீரென்று ஆய்வு மேற்கொண்டனர். முல்லைப்பெரியாறு அணை, பேபி அணை, அணையின் மதகு பகுதி ஆகிய இடங்களுக்கு சென்று ஆய்வு செய்தனர். பின்னர் அணையின் கேலரி பகுதிக்கு சென்று நீர் மாதிரியை சேகரித்தனர். சுமார் ஒரு மணி நேர ஆய்வுக்கு பின்னர் துணை கண்காணிப்பு குழுவினர் தேக்கடிக்கு திரும்பி வந்தனர். இதையடுத்து

குமுளி ஒன்றாம் மயில் பகுதியில் உள்ள கண்காணிப்பு குழுவின் அலுவலகத்தில் துணை கண்காணிப்பு குழுவினர் மற்றும் இரு மாநில அதிகாரிகள் பங்கேற்ற ஆய்வு கூட்டம் நடைபெற்றது சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற கூட்டத்தின் போது அணையின் கேலரியில் சேகரிக்கப்பட்ட நீர் மாதிரியை மத்திய நீர்வள ஆணையத்திற்கு அனுப்புவது என்றும், இது தொடர்பாக மூவர் குழுவிற்கு அறிக்கை அனுப்புவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

**வட தமிழகத்தில் கனமழை பெய்யும்**



சென்னை: தமிழகத்தில் தொடர்ந்து நிலவும் வெயில் காரணமாக வெப்ப சலனம் ஏற்பட்டுள்ளது. இதனால் தமிழகத்தில் அநேக இடங்களில் மழை பெய்து வருகிறது. அதிகபட்சமாக தமிழகத்தில் நேற்று அரக்கோணம், காவேரிப்பாக்கம், திருவாலங்காடு ஆகிய இடங்களில் 50 மிமீ மழை பெய்துள்ளது.

இந்நிலையில், தென்மேற்கு பருவமழை மீண்டும் கேரளாவில் தீவிரம் அடைந்துள்ளது. இதன் காரணமாக தமிழக கேரள எல்லைப் பகுதியில் மழை பெய்து வருகிறது. மேலும் வளி மண்டல மேல் அடுக்கில் ஏற்பட்டுள்ள காற்று சுழற்சி வங்கக் கடலில் தமிழகம், புதுச்சேரியை

ஒட்டிய கடலோரப் பகுதியில் நிலை கொண்டுள்ளது. இதன் காரணமாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, வேலூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், திருப்பூர், கோவை, ஈரோடு, கரூர், அரியலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும். தவிர வட மாவட்டங்களில் கனமழை பெய்யும்.

**கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகளுக்கு கடன் கொடுக்க மறுப்பு**

விழுப்புரம், : கல்வராயன்மலை பகுதியில் அதிக மரவள்ளி சாகுபடி செய்யப்படுவதால் அங்கு ஜவ்வரிசி தொழிற்சாலை அமைக்க வேண்டும் என விவசாயிகள் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சியர் லட்சுமி தலைமையில் நடந்தது. மாவட்ட வருவாய் அலுவலர் பிருந்தாதேவி, மின்வாரிய மேற்பார்வைபொறியாளர் அசோகன் மற்றும் தோட்டக்கலைத்துறை, வேளாண்த்துறை, கூட்டுறவுத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனனர்.கூட்டத்தில் விவசாய சங்க பிரதிநிதிகளும், விவசாயிகளும் கலந்து கொண்டு தங்கள் கோரிக்கையை முன்வைத்து பேசினர்.

கூட்டத்தில் விவசாயிகள் பேசியதாவது: விழுப்புரம் மாவட்டம் அதிக விவசாயிகள் நிறைந்த மாவட்டம். விவசாய மின் இணைப்பு கேட்டு கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக விவசாயிகள் காத்துக்கிடக்கிறார்கள். ஆனால் அதிகாரிகள் மின்கம்பி வரவில்லை, கம்பம் இல்லை என்று ஏதாவது ஒரு காரணத்தை கூறி மின் இணைப்பு கொடுக்காமல் இழுத்தடித்து வருகின்றனர்.

இதற்கு பதிலளித்து பேசிய மின்வாரிய அதிகாரி, சீனியாரிட்டி அடிப்படையில் மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. இணைப்பு கொடுப்பதற்கான உதிரிபாகங்கள் வருவதற்கு காலதாமதம்

ஏற்பட்டுள்ளதால் மின் இணைப்பு கொடுக்கும் பணியில் தாமதம் ஏற்பட்டுள்ளது, என்றார். பின்னர் விவசாயிகள் பேசுகையில், கல்வராயன்மலைப்பகுதியில் அதிக அளவில் மரவள்ளி பயிரிடப்பட்டு வருகிறது. ஆனால் போதிய விலை கிடைக்காததால் விவசாயிகள் நஷ்டத்திற்கு ஆளாகி வருகின்றனர். எனவே, அப்பகுதியில் ஜவ்வரிசி தொழிற்சாலைகள் அமைத்து கொடுக்க ஆட்சியர் நடவடிக்கை எடுக்க வேண்டும். நெல் சாகுபடிக்கு முன்பு மண் மாதிரி சோதனை நடத்த வேளாண்துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்தால் எங்களுக்கு அதிக மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது. கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகளுக்கு கடன் கொடுக்க அதிகாரிகள் மறுக்கின்றனர். உரம் தட்டுப்பாட்டையும் போக்க வேண்டும். விழுப்புரத்திலிருந்து பில்லூர், பிள்ளையார்குப்பம் வழியாக அரசு நகரப்பேருந்து இயக்கப்பட்டு வந்தது. சாலை வசதியில்லாததால் கடந்த 3 மாதங்களாக பேருந்து இயக்கப்படவில்லை.

தற்போது புதிதாக தார்சாலை போடப்பட்டுள்ளதால் நிறுத்தப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்க வேண்டும். விழுப்புரம் மாவட்டத்தில் ஆக்கிரமிப்பு மற்றும் பல்வேறு துறைகளில் தகவல் ஆணையம் மூலம் கேட்கப்படும் கேள்விகளுக்கு அதிகாரிகள் சம்பந்தமே இல்லாத பதிலை கூறுகிறார்கள். விழுப்புரம், திருக்கோவிலூர் உள்ளிட்ட தாலுகாவில் பட்டா மாற்றம் செய்யக்கோரி விண்ணப்பித்தால் பல மாதங்களாக இழுத்தடிக்கிறார்கள்.

தாசில்தார் முறையாக நடவடிக்கை எடுத்து பட்டா வழங்க வேண்டும். சர்க்கரை ஆலைகள் நிலுவைத்தொகை பெற்றுத்தர ஆட்சியர் முத்தரப்பு கூட்டத்தை கூட்டியதற்கு நன்றி தெரிவிக்கிறோம். அதற்கேற்றாள் போல்

செப்டம்பர் மாதத்திற்குள் நிலுவைத்தொகையை வழங்க ஆலை நிர்வாகம் முன்வரவேண்டும், என பேசினர். இதனை தொடர்ந்து பேசிய ஆட்சியர் லட்சுமி, 15 நாட்களுக்குள் விவசாயிகளின் பிரச்னைகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்க துறை அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது, என்றார்.

**கிழங்கு மஞ்சள் விலை குவின்டாலுக்கு ரூ.200 உயர்வு**

கோவை, : கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று மாலை நடந்த மஞ்சள் ஏலத்தில் விரலி மஞ்சள் விலை ஒரே நிலையில் நீடிக்கிறது. கிழங்கு மஞ்சள் குவின்டாலுக்கு ரூ.200 உயர்ந்துள்ளது. கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று மாலை நடந்த மஞ்சள் ஏலத்தில் விரலி ரகம் 45 குவின்டாலும், கிழங்கு ரகம் 7 குவின்டாலும் என மொத்தம் 52 குவின்டால் விற்பனைக்கு வந்தது. இதை பிரஸ் காலனி, சாமிசெட்டிபாளையம், கென்னனூர் பகுதியை சேர்ந்த விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர். இவை அனைத்தும் விற்பனையானது. இதை கோவை, பொள்ளாச்சி பகுதியை சேர்ந்த வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். விலை விரலி மஞ்சள் குவின்டால் ரூ.6,370 முதல் ரூ.7,251 வரை விற்றது. இதன் சராசரி விலை ரூ.7,000. விற்பனை மதிப்பு ரூ.3.15 லட்சம். கிழங்கு மஞ்சள் குவின்டால் ரூ.6,000 முதல் ரூ.7,051 வரை விற்றது. இதன் சராசரி விலை ரூ.6,800. விற்பனை மதிப்பு ரூ.48 ஆயிரம். இரண்டு ரகமும் சேர்ந்து ரூ.3.62 லட்சத்திற்கு விற்றது. இது கடந்த ஏலத்தை காட்டிலும் ரூ.2.29 லட்சம் குறைவாகும். மஞ்சள் வரத்து 34 குவின்டால் அளவு குறைந்துள்ளது. விலை விரலி மஞ்சள் கடந்த

ஏலத்தின் போது விற்ற விலையே நீடித்தது. கிழங்கு மஞ்சள் குவின்டாலுக்கு ரூ.300 அதிகரித்துள்ளது.

**இயந்திரம் மூலம் 10,600 ஹெக்டேர் நெல் நடவு**

திருச்சி, :திருச்சி மாவட்டத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் நெல் இயக்கத்தின் கீழ் நடப்பு சம்பா பருவத்தில் இயந்திரங்கள் மூலம் நெல் நடவு செய்தல் பணிக்கு 10,600 ஹெக்டர் இலக்கு பெறப்பட்டுள்ளது. நெல் நடவு இயந்திரங்கள் இருப்பிலுள்ள குழுக்கள், நெல் நடவு இயந்திரங்கள் உரிமையாளர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்ட கூட்டம் வேளாண் இணை இயக்குநர் சந்திரசேகரன் தலைமையில் அலுவலகத்தில் உள்ள அட்மா கூட்ட அரங்கில் நடைபெற்றது. நெல் நடவு இயந்திரங்கள் வைத்துள்ள 20 குழுக்கள் மற்றும் நடவு இயந்திரங்கள் வைத்துள்ள உரிமையாளர்கள் 5 நபர்கள் மற்றும் விவசாயிகள் 30 நபர்கள் கலந்து கொண்டனர். நடவு இயந்திரம் மூலம் நெல் நடவு பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது. தற்போது இருப்பில் உள்ள நெல் நடவு இயந்திரம் பராமரிப்பு பழுது நீக்கம் மற்றும் உதிரி பாகங்கள் கொள்முதல் தேவை பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது.

நெல் நடவு இயந்திரங்கள் சப்ளை செய்த நிறுவனங்கள் உதிரி பாகங்கள் கிடைக்கும் ஏஜென்ஸி பற்றிய விவரங்கள் தெரிவிக்கப்பட்டது. குமுளூர் வேளாண் பொறியியல் கல்லூரி அலுவலர் ஜேம்ஸ் கலந்துகொண்டு நெல் பாய் நாற்றங்கால் அமைப்பது, நெல் நடவு இயந்திரம் பழுது நீக்குவது, வாடகைக்கு நெல் நடவு இயந்திரங்கள் கிடைக்கும் இடங்கள் மற்றும் நடவு இயந்திரங்கள் சிறு பழுது சரி செய்வது பற்றியும் எடுத்துக் கூறினார். மேலும் இந்த ஆண்டு

நடவு இயந்திரங்களுக்கு வழங்கும் மான்ய விவரங்கள் தங்கள் விருப்பத்திற்கேற்றவாறு அவர்கள் பகுதிக்கு வயலுக்கு ஏற்ற நடவு இயந்திரங்களை வாங்கிக் கொள்ளலாம். அதற்குா◌ிய மான்யம் அவர்கள் வங்கிக் கணக்கிற்கு பின்னேற்பு மான்யம் அதற்கு வழங்கப்படும் என வேளாண் இணை இயக்குனர் சந்திரசேகரன் எடுத்துக் கூறினார். இந்த கூட்டத்தில் கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) பாண்டியராஜன் மற்றும் திருச்சி வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**பட்டி, கொட்டகை அமைத்து ஆடுகளை பராமரிக்க வேண்டும்**

க.பரமத்தி, : ப.பரமத்தி ஒன்றியம் தென்னிலையில் நடந்த ஆடுகள் வளர்ப்பு பயிற்சி கூட்டத்தில் பட்டி, கொட்டகை அமைத்து ஆடுகளை பராமரிக்க வேண்டும் என்று கால்நடை உதவி இயக்குனர் ராஜேந்திரன் ஆலோசனை வழங்கினார். க.பரமத்தி ஒன்றியம் தென்னிலை மேற்கு மற்றும் தொக்குப்பட்டி ஆகிய ஊராட்சிகளில் 85 பயனாளிகளுக்கு இலவச ஆடுகள் வழங்கப்பட உள்ளது. இதையடுத்து பயனாளிகளுக்கு ஆடுகள் வளர்ப்பு பற்றிய பயிற்சி கூட்டம் சின்னதாராபுரத்தில் நடைபெற்றது. கால்நடை டாக்டர் மோகன்ராஜ் வரவேற்றார். ஊராட்சி தலைவர்கள் இந்திராணி, தென்னிலை மேற்கு ஊராட்சி தலைவர் பொன்னுசாமி, ஒன்றியகுழு உறுப்பினர் கலையரசி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியை அகிலா திட்டத்தை பற்றி விளக்கிப் பேசினார். கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் ராஜேந்திரன், ஆடு வளர்ப்பு பற்றிய பயிற்சி கையேடுகளை வழங்கி பேசியதாவது: காலை 8 மணி முதல் 10 மணிக்குள் ஆடுகளை மேய்ச்சலுக்கு கொண்டு

செல்வதுடன் மாலையில் பட்டிகள் அல்லது கொட்டகை அமைத்து பாதுகாக்க வேண்டும். பசுதீவனங்களையும், அடர்தீவனங்களை ஆடுகளுக்கு வழங்க வேண்டும் என்றார். தொடர்ந்து கொட்டகை மற்றும் இட வசதிகள் குறித்தும், தீவனங்களை பராமரிப்பது, தீவனம் தயாரிப்பு முறைகள், இனப்பெருக்கம், சினை ஆடுகளை பாராமரிக்கும் முறை, குட்டிகளை பாராமரிக்கும் முறை, கால்நடைகளை தாக்கும் நோய்களான வெக்கை சார்பு, நீல நாக்கு, செம்மறியாட்டு அம்மை, துள்ளுமாரி, தொற்று கழிதல், கருச்சிதைவு, குளம்பு அழுகல் ஆகிய நோய்களில் இருந்து ஆடுகளை பாதுகாக்க அவ்வப்போது கால்நடை அரசு மருத்துமனைக்கு கொண்டு வந்து உரிய நேரத்தில் ஆடுகளுக்கு தடுப்பூசி போட வேண்டும் என ஆலோசனை தெரிவித்தார்.

செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு பற்றி கால்நடை டாக்டர்கள் மோகன்ராஜ், கலைவாணி, கோபால் ஆகியோர் பொதுமக்களுக்கு பயிற்சி அளித்தனர். பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு கையேடுகள் வழங்கப்பட்டது. கால்நடை ஆய்வாளர்கள் ஜானகி, பாபு, உதவியாளர்கள் மரியஉபகாரம், முருகேசன், தாமராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். தென்னிலை கால்நடை டாக்டர் கலைவாணி நன்றி கூறினார்.

**தேவாரம் பகுதியில் சாம்பார் வெள்ளரி விலை சரிவு**

தேவாரம், : தேவாரம் பகுதியில் சாம்பார் வெள்ளரி விலை வீழ்ச்சியால், விளைந்த வெள்ளரியை விவசாயிகள் பறிக்காமல் தோட்டத்திலேயே விட்டுவிட்டனர். தேவாரம் அருகே உள்ள தே.மீனாட்சிபுரம், ரெங்கநாதபுரம், தம்மிநாயக்கன்பட்டி, பொட்டிப்புரம்,தே.சிந்தலைச்சேரி, மேலச்சிந்தலைச்சேரி, லட்சுமிநாயக்கன்பட்டி, அழகர்நாயக்கன்பட்டி,

பல்லவராயன்பட்டி, உள்ளிட்ட பகுதிகளில் குறைந்தளவு நிலத்தடி நீர்மட்டத்தை கொண்டு கிணற்று பாசனம் மூலம் காய்கறி விவசாயம் அதிகளவில் நடந்து வருகிறது. இங்கு விளையும் காய்கறிகள் தேவாரத்தில்உள்ள தினசரி காய்கறி மார்கெட்க்கு அனுப்பப்படுகிறது. கேரளாவில் நடைபெறும் ஓணம்பண்டிகைக்காக இந்தபகுதியில் சாம்பார் வெள்ளரி அதிகளவில் பயிரிடப்பட்டது. தற்போது நன்கு விளைந்த நிலையில் சாம்பார் வெள்ளரி ஒரு கிலோ ரூ.2 க்கு விற்பனை செய்யப்படுவதால் வெள்ளரிக்காயை பறிக்கும் கூலி ஆட்களுக்கு கூட பணம் கொடுக்க முடியாத அளவுக்கு விலைவீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் விளைந்த வெள்ளரிக்காயை தோட்டத்திலே பறிக்காமல் விட்டு விட்டனர். தோட்டத்தில் வெள்ளரிக்காய்கள் பழுத்து நாசமாகிவருகிறது. இதனால் விவசாயிகள்ங கவலை அடைந்துள்ளனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், ‘கேரளாவில் நடைபெறும் ஓணம் பண்டிகையை யொட்டி சாம்பார் வெள்ளரிக்கு நல்ல விலைகிடைக்கும் என்ற நோக்தத்தில் விவசாயம் செய்தோம் தற்போது விளைந்த வெள்ளரிக்காய்களை மார்கெட்க்கு எடுத்து சென்றால் அங்கு ஒரு கிலோ ரூ.2க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனால் தோட்டத்தில் இருந்து வெள்ளரிக்காயை பறித்துக்கொண்டு மார்க்கெட்டுக்கு எடுத்து சென்றால் வெள்ளரிக்காயை விற்றுவிட்டு ஏலக்கடைகாரர்களுக்கு கையில் இருந்து பணம் கொடுக்கும் நிலை ஏற்பட்டது. இதனால் வெள்ளரிக்காய்களை பறிக்காமல் தோட்டத்திலேயே விட்டு விட்டோம். தற்போது வெளிமாவட்டங்களில் இருந்து அதிகளவில் சாம்பார் வெள்ளரி வரத்து இருப்பதால் விலைகுறைவு ஏற்பட்டுள்ளது’ என்றனர்.

**கரும்பு சாகுபடி பயிற்சி முகாம்**

திருச்சுழி, : திருச்சுழி அருகே கோவிலாங்குளத்தில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நீடித்த நவீன கரும்பு சாகுபடி குறித்த பயிற்சி நடைபெற்றது. திட்ட ஒருங்கிணைப்பாளர் விஜயலட்சுமி துவக்கி வைத்து சாகுபடியின் கோட்பாடுகள் குறித்து எடுத்துரைத்தார். சக்தி சர்க்கரை ஆலை கரும்பு நிர்வாக அலுவலர் வேணுகோபால் சாகுபடியின் முக்கியத்துவம் பற்றி கூறினார். பூர்ணியம்மாள் ஒரு விதை பருவ சீவல் எடுக்கும் முறை, கரணை நேர்த்தி, நாற்றங்கால் தயாரிப்பு மற்றும் இதர மேலாண்மை முறைகளை விளக்கமாக எடுத்துரைத்தார். மாரீஸ்வரி கரும்பிற்கான பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாட்டு முறைகளைப் பற்றி எடுத்துரைத்தார். ராஜ்குமார் கரும்பில் ஏற்படும் நுண்ணூட்டச் சத்து குறைபாடு மற்றும் வளர்ச்சி ஊக்கிகளின் முக்கியத்துவம் குறித்து விளக்கமளித்தார். ஆனந்தி நீடித்த நவீன கரும்பு சாகுபடிகேற்ற ரகங்கள் பற்றி கூறினார். இதில் சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த 100 விவசாயிகள் பங்கேற்றனர். முகாம் ஏற்பாடுகளை பூர்ணியம்மாள், கவிதா ஆகியோர் செய்திருந்தனர்.

## தென்னை விவசாயிகள் ஒன்றிணைந்து உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் அமைத்தால் மாற்றத்தை ஏற்படுத்தலாம்

பட்டுக்கோட்டை, : பட்டுக்கோட்டையில் தஞ்சாவூர் வேளாண் வணிக துணை இயக்குநர் கலியராஜ் வெளியிட்டுள்ள அறிக்கை: பட்டுக்கோட்டை, மதுக்கூர், சேதுபாவாசத்திரம், பேராவூரணி மற்றும் ஒரத்தநாடு வட்டாரத்தை சேர்ந்த தென்னை விவசாயிகள் தங்கள் பகுதிகளில் தென்னை உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் துவங்க வேண்டும். தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிக தென்னை சாகுபடி பரப்பளவை கொண்டுள்ள இப்பகுதி விவசாயிகள் வட்டாரத்துக்கு ஒரு தென்னை உழவர் உற்பத்தியாளர் நிறு வனம் துவங்குவதன் மூலம் தென்னை விவசாயிகளிடையே ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும். ஒரு

வட்டாரத்தில் உள்ள ஆர்வமுள்ள 15 முதல் 20 நபர்கள் சேர்ந்து விவசாய குழுக்கள் அமைக்க வேண்டும். அவ்வாறு அமைக்கப்பட்ட 50 முதல் 70 தன்னார்வ விவசாய குழுக்கள் ஒன்று சேர்ந்து உழவர் உற்பத்தியாளர் மன்றம் அமைப்பை உருவாக்க வேண்டும்.

18 முதல் 24 மாதங்கள் விவசாயிகளை தயார் செய்தபின் கம்பெனி சட்டத்தின்கீழ் நிறுவனமாக அதாவது உற்பத்தியாளர் கம்பெனி என பதிவு செய்ய வேண்டும். இந்த நிறுவனத்தில் விவசாயிகள் மட்டுமே உறுப்பினராக முடியும். விவசாயிகளால் உருவாக்கப்படுவதும், உழவருக்கே சொந்தமானது. தனி விவசாயியாக வேளாண்மையை மேற்கொள்வதைவிட உற்பத்தியாளர் அமைப்பு எனும் தளத்தில் குழுவாக விவசாயம் மேற்கொள்ளும்போது, சிக்கனமாக அதே சமயம் சரியான அளவில் இடுபொருட்களை உபயோகிப்பதும் ஒன்றுபட்டு ஒரே மாதிரியான விளைபொருட்களை விளைவிப்பதும், அரசு உதவி மற்றும் தனியார் துறையின் உதவிகளுடன் உரிய விலை பெற சாத்தியமாகிறது. இவ்வாறு தென்னை விவசாயிகள் ஒரு அமைப்பின்கீழ் செயல்படும்போது நபார்டு வங்கி ரூ.100 லட்சம் வரை வங்கி கடன் தருகிறது. ஆதார நிறுவனத்தின் மூலம் 3 ஆண்டுகள் வரை உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தை வழிநடத்த மத்திய, மாநில அரசுகள் நிதியுதவி செய்கின்றன. எனவே இப்பகுதி தென்னை விவசாயிகள் தென்னை உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் அமைத்து தாங்கள் விளைவிக்கும் தேங்காய்க்கு விலை நிர்ணயிக்கும் தகுதியை பெற முயற்சி செய்ய வேண்டும். மேலும் “உழவர் உற்பத்தியாளர் நிறுவனம்” தொடர்பாக விரிவான விளக்கம்பெற பட்டுக்கோட்டை வேளாண் வணிக அலுவலர் மாலதி சிவக்குமாரை 9442889344 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**விவசாயிகளுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி**

பரமக்குடி, : விவசாயிகள் ஆர்வலர் குழு மூலம் உயிரிகள் கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தி செய்வதற்கான ெதாடக்கவிழா மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சி விழா நடந்தது.மாநில சமச்சீர் வளர்ச்சியின் கீழ் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மேலாண்மை மாதிரி கிராமமாக பரமக்குடி அருகே கமுதக்குடி கிராமம் தேர்வு ெசய்யப்பட்டுள்ளது. இதையடுத்து அங்கு விவசாயிகள் ஆர்வலர் குழு மூலம் உயிரிகள் கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தி செய்வதற்கான தொடக்கவிழா மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சி விழா நடந்தது. வேளாண்மை இணை இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார். ஊராட்சி தலைவர் கலைச்செல்வி முன்னிலை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குநர் கண்ணையா வரவேற்றார்.

விழாவில் இணை இயக்குநர் பேசுகையில், “தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் உணவு தானியபயிர், காய்கறி பயிர் 25 முதல் 30 சதவிகிதம் வரை பூச்சி மற்றும் நோய் தாக்குதல்களால் பாதிக்கப்படுகின்றன. இதனை கட்டுப்படுத்த அதிகளவு பூச்சிக்கொல்லி மருந்துகள் பயன்படுத்துவதால் தண்ணீர், மண், காற்று தூசி படிகிறது. இதுதவிர பிற நன்மை பயக்கும் உயிரினங்களான ஒட்டுண்ணிகள், பூஞ்சைகள் பாதிக்கப்படுகின்றன. ரசாயன பூச்சிகொல்லிகளால் உணவு பயிர்கள் நச்சுதன்மை கொண்டதாகவும், உடல் நலத்திற்கு தீங்கு விளைவிப்பதாகவும் மாறுகிறது. விவசாயிகள் உடல் நலத்திற்கு பாதகம் இல்லாத, நீடித்த நிலையான வேளாண்மை முறையை மேற்கொள்ள இதுபோன்ற பயிற்சிகளில் பங்கு பெற வேண்டும் என்றார்.

**பார்த்தீனியச் செடிகளை அழிக்க விவசாயிகளுக்கு பயிற்சி**

கமுதி, : பார்த்தீனிய செடிகளை அழிப்பது குறித்து விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறை சார்பில் பயிற்சி அளிக்கப்பட்டது. கமுதி அருகே கோரப்பள்ளம் கிராமம் மற்றும் அதனை சுற்றியுள்ள சுற்று வட்டார பகுதியை சேர்ந்த விவசாயிகளுக்கு பார்த்தீனியம் செடிகளை அழிப்பது குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும் பார்த்தீனியம் செடிகளால் கால்நடைகளுக்கும், மனிதர்களுக்கும், ஏற்படும் தீமைகள் பற்றியும், வேளாண் நிலங்களில் இவைகள் வளர்ந்தால் விவசாயிகளுக்கு ஏற்படும் இடையூறுகள் பற்றியும், இச்செடிகளை அழிக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் விளக்கப்பட்டது.

வேளாண்மை உதவி இயக்குநர் ஆல்பர்ட் ராபின்சன், வேளாண்மை அலுவலர் முகமது சித்திக், ஆகியோர் விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளித்து பேசினர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வேளாண்மை உதவி அலுவலர்கள் ராமமூர்த்தி, சின்னச்சாமி ஆகியோர் செய்திருந்தனர்.

### மழையால் நிலக்கடலை பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி

சத்தியமங்கலம், : புஞ்சைபுளியம்பட்டியில் கடந்த ஒருவார காலமாக மழை பெய்து வருவதால் வாடிக்கிடந்த நிலக்கடலை பயிர்கள் செழித்து வளர்ந்துள்ளன. இதனால் மாவாரி நிலக்கடலை பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். புஞ்சைபுளியம்பட்டி சுற்றுவட்டார பகுதிகளான புங்கம்பள்ளி, தேசிபாளையம், நல்லூர், காராப்பாடி, காவிலிபாளையம், எரங்காட்டுப்பாளையம், நொச்சிக்குட்டை, மாதம்பாளையம், கள்ளிப்பாளையம், வெங்கநாயக்கன்பாளையம், பெரியகள்ளிப்பட்டி, மல்லியம்பட்டி, பனையம்பள்ளி, விண்ணப்பள்ளி உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் சுமார் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கடந்த ஆடிமாதம் மானாவாரி

பயிராக நிலக்கடலை பயிரிட்டுள்ளனர். பயிர் வளர்ந்த நிலையில் மழை பெய்யாத காரணத்தினால் வாடிய நிலையில் இருந்தது. இதனால் மழையை எதிர்நோக்கி விவசாயிகள் காத்திருந்தனர். இந்நிலையில் கடந்த ஒரு வார காலமாக இப்பகுதிகளில் விட்டு விட்டு மழை பெய்து வருகிறது. இதில் இருதினங்கள் பலத்த மழையும் பெய்தது.

இதனால் வாடிக்கிடந்த நிலக்கடலை செடிகள் துளிர்த்து பச்சை நிற போர்வை போர்த்தியது போல் அழகாக காட்சியளிக்கின்றன. இதுகுறித்து இப்பகுதி விவசாயிகள் கூறுகையில், 'புளியம்பட்டி சுற்றுவட்டாரத்தில் மானாவாரியாக நிலக்கடலை அதிகளவில் பயிரிடப்படும். ஆண்டு தோறும் ஆடிப்பட்டத்தில் நிலக்கடலை விதைப்பு செய்வது வழக்கம். இந்த ஆண்டும் விதைப்பு செய்து மழைக்காக காத்திருந்தோம். தக்க தருணத்தில் மழை பெய்துள்ளது. இந்த ஈரப்பதத்தை பயன்படுத்தி, களைகளை அகற்றி, உரமிடப்படும். இதைத்தொடர்ந்து 15 நாள் இடைவெளியில் இருமுறை மழை பெய்தால் புரட்டாசி மாத இறுதி அல்லது ஐப்பசி மாத முதல் வாரங்களில் நிலக்கடலை அறுவடை செய்துவிடலாம்', என்றனர்.

**தேயிலை தூள் விலை உயர்வு**

குன்னூர்,: குன்னூர் அரசு கூட்டுறவு தேயிலை ஏல மையத்தில் இந்தாண்டுக்கான 34வது ஏலம் நேற்று முன்தினம் நடந்தது. இதில் மொத்தம் 5 லட்சத்து 24 ஆயிரத்து 354 கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 3 லட்சத்து 46 ஆயிரத்து 415 கிலோவும், டஸ்ட் ரகம் 1 லட்சத்து 78 ஆயிரத்து 939 கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் வெளிநாட்டு வர்த்தகர்கள் பங்கேற்காததால் தேயிலை தூளின் விற்பனை 50 சதவீதமாக குறைந்தது. மேலும்

அனைத்து ரகத்திற்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.3 வரை விலை சரிந்தது. கடந்த சில வாரங்களாக ஏல மையங்களில் விற்பனையாகும் தேயிலை தூளின் அளவு குறைந்து வருவதால் அனைத்து தரப்பினரும் பாதிப்படைந்துள்ளனர்.

**விவசாயிகளுக்கு ரூ.5,500 கோடி பயிர்க் கடன் தமிழக அரசு அறிவிப்பு**



சென்னை, முதல்வர் ஜெயலலிதாவின் நடவடிக்கையால் நடப்புஆண்டில்(2015-2016) 10 லட்சத்து 75 ஆயிரம் விவசாயிகளுக்கு ரூ.5,500 கோடி பயிர்க்கடன் வழங்கதிட்டமிடப்பட்டுள்ளது என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு :

விவசாயிகளுக்கான குறுகிய கால பயிர்க்கடன் வட்டி மானிய திட்டத்தை நடப்புநிதியாண்டில் 30.6.2015 வரை மட்டும் மத்திய அரசு நீட்டித்து மாற்று திட்டத்தைஆலோசித்து வந்த நிலையில், தமிழ்நாடு அரசு சார்பில் இது தொடர்பாக கடிதம் ஒன்று29.4.2015 அன்று அனுப்பப்பட்டது. இதனைத் தொடர்ந்து 20.6.2015 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா , பிரதமர் மோடிக்கு எழுதிய கடிதத்தில், விவசாயிகளுக்கான குறுகிய கால பயிர்க்கடன் வட்டி மானியத் திட்டத்தில், தற்போதுள்ள நடைமுறைகளின்படியே தொடரவேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தி எழுதியுள்ளார்கள். மத்திய அரசால்உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அறியப்பட்ட இரண்டு மாற்றங்களும் பாதகமானவை என்றுஅந்தக் கடிதத்தில் தெரிவித்திருந்தார்கள். முதலாவதாக, வங்கிகள், முன்னுரிமைபிரிவுகளுக்கு அடிப்படையான வட்டி விகிதத்தில் கடன் வழங்க அனுமதித்தல்,இரண்டாவதாக, பயனாளிகளுக்கு நேரடியாக மானியம் வழங்குதல், அதாவது விவசாயிகள்தாங்கள் பெற்ற கடனை முழுமையாக திரும்பச் செலுத்திய பின்னர், நேரடியாக மானியம்வழங்கும் முறை, தற்போதுள்ள நடைமுறையான வங்கிகளின் கடன் வழங்கும்தகுதிக்கேற்ப வட்டி மானியத்தினை வங்கிகளுக்கு வழங்கும் முறைக்கு மாறுபட்டதாகும்என தெரிவிக்கப்பட்டிருந்தது.

முதலமைச்சர் ஜெயலலிதா மேலும் தமது கடிதத்தில், எதிர்பாராத நிகழ்வுகளுக்குஉட்படும் வேளாண்மைப் பணிகளை

மேற்கொள்ளும்போது, தற்போது வழங்கப்படும்கடன்களுக்கான வட்டி விகிதங்களை உயர்த்துவதோ, அல்லது விவசாயிகளுக்குஅளிக்கப்படும் சலுகைகளை குறைப்பதோ தேவையற்றதாகும் என குறிப்பிட்டுள்ளார்.மேலும், இச்சூழ்நிலைகளில் விவசாயிகள் அதிக வட்டியினை முதலில் செலுத்தி, பின்னர்அத்தொகையை, நேரடி மானியம் மூலம் பெறுவது என்பது விவசாயிகளை கடுமையாகப்பாதிக்கும் என்றும், தற்போது நடைமுறையில் உள்ளபடி, விவசாயிகளுக்கு வங்கி கணக்குமூலம் கடன் வழங்கப்படும்போதே, விவசாயிகள் வட்டி சலுகைகளைப் பெற்று வருகின்றனர். நேரடி மானியத் திட்டத்திற்கு மாறும்போது, கடனைத் திரும்பச் செலுத்திய பின்னர்,மானியம் வழங்கப்படுவதால் விவசாயிகளுக்கு எவ்வித பலனும் இல்லாததுடன்,விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் கடன் கிடைப்பதிலும், இலக்கினை அடைவதிலும்,பொறுப்புடைமையிலும் எதிர்பார்க்கும் பலன் கிடைக்காது என்றும் அந்த கடிதத்தில்தெரிவித்திருந்தார்.முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் தமது கடிதத்தில், தமிழ்நாடு அரசு, கூட்டுறவுகள் மூலம்வழங்கப்படும் பயிர் கடன்களுக்கு, மாநில அரசின் நிதியிலிருந்து 4 சதவிகிதத்தொகையினை, ஊக்க வட்டி மானியமாக மத்திய அரசு வழங்கும் வட்டி மானியத்துடன்கூடுதலாக வழங்கி வருவதனையும் குறிப்பிட்டுள்ளார்கள். இதனால், தமிழ்நாட்டில் விவசாயப் பெருமக்கள், உரிய காலத்தில் கடனை செலுத்தும்போது, வட்டியின்றிபயிர்க்கடன் பெற்று பெரும்பயன் அடைகின்றனர். நம்நாட்டின் வேளாண் வளர்ச்சிக்குஉந்துதல் கொடுக்க வேண்டும் எனில், விவசாயிகளுக்கு தேவையான அளவு பயிர் கடன்கிடைக்கச் செய்வது அவசியம். எனவே, அடிப்படை நிலவரத்தை கருத்திற்கொள்ளாமல்,தற்போதுள்ள நடைமுறையினை மாற்றம் செய்வது, கடும் எதிர் விளைவுகளை உருவாக்கக்கூடும்.

எனவே, நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டு வரும் விவசாயிகளுக்கானஇத்திட்டத்தின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு, பாரத பிரதமர் மோடி நேரடியாக தலையிட்டு, இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள மாற்றங்கள் குறித்து,தொடர்புடைய அனைவரிடமும் நிதி ஆயோக் கூட்டத்தில் கலந்தாலோசனைமேற்கொண்டு, விவசாயிகளுக்கு அதிக பயன் தரக்கூடிய வகையில் திட்டம்அமையவேண்டும் எனவும் தற்போது, நடைமுறையில் உள்ளவாறே குறுகிய கால பயிர் கடன்வட்டி மானியத் திட்டம் தொடர வேண்டும் எனவும் முதலமைச்சர்ஜெயலலிதா கேட்டுக்கொண்டிருந்தார்.

முதல்வர் ஜெயலலிதா கடிதத்திற்கு மத்திய நிதி அமைச்சர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு 3.8.2015 தேதியிட்ட பதில் கடிதத்தில், மத்திய அரசுதற்போதுள்ள வட்டி மானியத் திட்டத்தின்படி மார்ச் 2016 வரை குறுகிய கால பயிர்க்கடன்களுக்கு வட்டி மானியம் தொடர்ந்து வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். மேலும்,இது தொடர்பாக, மத்திய அரசின் வேளாண்மைத் துறையால் ஒரு குழு அமைக்க மத்தியஅமைச்சரவை முடிவு செய்துள்ளதாகவும், இக்குழு சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குவழங்கப்படும் கடன்களை மேம்படுத்தவும், வட்டி மானியத் திட்டத்தின் நிதி ஆதாரங்களைஅதிக அளவில் பயன்படுத்தவும் பரிந்துரைக்கும் எனவும் தெரிவித்துள்ளார். இப்பொருள்தொடர்பாக மாநில அரசுகளுடன் கலந்தாலோசனை மேற்கொள்வதற்கான விவாதக்குறிப்புகளை நிதி ஆயோக் அமைப்பு தயாரித்து வருகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர்ஜெயலலிதா மேற்கொண்ட முயற்சியால் இந்தியா முழுவதுமுள்ளவிவசாயிகள், தடையில்லாத குறுகிய கால விவசாயக் கடன் பெற வழிவகை ஏற்பட்டுள்ளது.தமிழ்நாட்டில் கூட்டுறவு வங்கிகள்

மூலமாக 2014-2015ஆம் நிதி ஆண்டில்10,36,859 விவசாயிகளுக்கு, ரூ.5,000 கோடி என நிர்ணயிக்கப்பட்ட இலக்கைவிட கூடுதலாக, ரூ.5,279.91கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் (2015-2016) 10 லட்சத்து 75 ஆயிரம் விவசாயிகளுக்கு ரூ.5,500 கோடி பயிர்க்கடன் வழங்கதிட்டமிடப்பட்டுள்ளது.

Facebook Twitter Pinterest

தி இந்து
தமிழால் இணைவோம்

## வறட்சிக்கு இலக்கான பகுதிகளை வளப்படுத்தும்_ வெள்ளநீர் கால்வாய் திட்டத்துக்கு ரூ.500 கோடி கூடுதல் செலவு_



▲ திருநெல்வேலி அருகே பொன்னாக்குடி பகுதியில் வெட்டப்பட்டு, பணி நிறுத்தப்பட்ட வெள்ளநீர் கால்வாய். (கோப்புப்படம்)

திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் வறட்சிக்கு இலக்கான

பகுதிகளை வளப்படுத்தும் நோக்கில் செயல்படுத்தப்பட்ட வெள்ளநீர் கால்வாய் திட்டம், அரசியல் காரணங்களால் கிடப்பில் போடப்பட்டுள்ளது. இதனால் ரூ. 369 கோடியில் முடிக்க வேண்டிய திட்டத்துக்கு இப்போதுள்ள நிலையில் ரூ.872 கோடி ஒதுக்க வேண்டியிருக்கிறது.

தாமிரபரணி ஆற்றிலிருந்து ஆண்டுதோறும் மழைக் காலங் களில் 50 ஆயிரம் மில்லியன் கன அடி தண்ணீர் வீணாக கடலில் கலக்கிறது. அவ்வாறு வீணாகும் தண்ணீரை வறண்ட பகுதிகளான திருநெல்வேலி மாவட்டத்துக்கு உட்பட்ட ராதாபுரம், திசையன்விளை, நாங்குநேரி மற்றும் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள சாத்தான்குளம் வட்டார பகுதிகளுக்கு திருப்பிவிட்டால் பல ஆயிரம் ஏக்கர் நிலம் செழிக்கும். இதனை கருத்தில்கொண்டு தாமிரபரணி ஆறு- கருமேனிஆறு- நம்பியாறு ஆகியவற்றை இணைத்து திசையன்விளை அருகே எம்.எல்.தேரியில் மிகப்பெரிய குளம் அமைக்கும் வெள்ளநீர் கால்வாய்

திட்டத்தை செயல்படுத்த கடந்த 2009-ம் ஆண்டில் அப்போதைய அரசு நடவடிக்கை எடுத்தது.

**2 கட்டம் நிறைவு**

இத்திட்டம் ரூ.369 கோடியில் தயாரிக்கப்பட்டு முதல்கட்டமாக ரூ.65 கோடியை ஒதுக்கி அப்போ தைய முதல்வர் மு.கருணாநிதி உத்தரவிட்டிருந்தார். இதன் தொடர்ச்சியாக 2010-ம் ஆண்டில் ரூ.41 கோடியும், 2011-ல் ரூ.107 கோடியும் ஒதுக்கப்பட்டது. திட்டத்தில் முதல்கட்டமாக கன்னடி யன் கால்வாய் முதல் திடியூர் வரை 20.3 கி.மீ. தூரம், 2-ம் கட்டமாக திடியூர் முதல் மூலக்கரைப்பட்டி வரை 18.6 கி.மீ. தூரம் வரையில் கால்வாய் அமைக்கும் பணிகள் பெரும்பாலும் முடிவுற்றுள்ளன. இதில் மேலச்செவல் கிராமத்தில் ஒரு பாலம், ஒரு

ரயில்வே பாலம், நான்கு வழிச்சாலையில் பாலம், இணைப்பு கால்வாயில் இரு பாலங்கள் கட்ட வேண்டியுள்ளது.

**திட்டம் சுணக்கம்**

இந்நிலையில் 2011-12-ம் ஆண்டுக்குப்பின் 2 கட்டங்களில் எஞ்சியுள்ள பாலங்களின் பணியையும், மூலக்கரைப்பட்டி முதல் காரியாண்டி வரையுள்ள 12.7 கி.மீ. தூரமுள்ள 3-ம் கட்ட பணிகளுக்கும், காரியாண்டி முதல் எம்.எல். தேரி வரையிலான 21.4 கி.மீ. தூரமுள்ள 4-ம் கட்ட பணிகளும் இதுவரை தொடங்கவில்லை. திமுக ஆட்சியில் கொண்டுவந்த திட்டம் என்பதால் அதிமுக ஆட்சிக்கு வந்ததும் இத் திட்டம் கிடப்பில் போடப்பட்டதாக கடந்த 4 ஆண்டுகளாக விவசாயிகள் மத்தியில் குற்றச்சாட்டு இருக்கிறது.

**அரசு கருத்து**

இதுகுறித்து ராதாபுரம் சட்டப் பேரவை தொகுதி முன்னாள் உறுப்பினர் அப்பாவு தகவல் அறியும் உரிமை சட்டத்தில் தகவல்களை கேட்டபோது, கடந்த 28.11.13-ம் தேதி திருநெல்வேலி மாவட்ட நீர்வள ஆதார அமைப்பு கண்காணிப்பு பொறியாளர் ஆ.மலைச்சாமி அளித்த பதிலில், இத் திட்டம் முழுவதும் மத்திய அரசின் விரைவு படுத்தப்பட்ட பாசன பயன் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு எதிர்பார்ப்பில் முதல் மற்றும் 2-ம் கட்ட பணிகளுக்கு மாநில நிதி ஒதுக்கீட்டின்கீழ் பணிகள் செயல்படுத்தப்பட்டன. தற்பொழுது மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பட்டவுடன் 3 மற்றும் 4-ம் கட்ட பணிகளை தொடங்கலாம் என்று அரசு கருத்து தெரிவித்திருந்தார்.

**விவசாயி கோரிக்கை**

இத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தி விவசா யிகள் குறைதீர் கூட்டத்தின் போது, தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில

துணைத் தலைவர் பி.பெரும் படையார், மாவட்ட ஆட்சியர் மு.கருணாகரனிடம் கோரிக்கை மனு அளித்திருந்தார்.

இதற்கு திருநெல்வேலி மாவட்ட நீர்வள ஆதார அமைப்பு கண்காணிப்பு பொறியாளரான ஆ.மலைச்சாமி அளித்த பதில்:

தாமிரபரணி, கருமேனியாறு மற்றும் நம்பியாறு நதிநீர் இணைப்பு திட்டமானது மத்திய அரசின் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளில் விரைவுபடுத்தப்பட்ட பாசனம் பயன்பெறும் திட்டத்தின்கீழ் திட்டத்தின் மதிப்பீட்டில் 90 சதவீதம் உதவி பெறுதல் என்ற கொள்கை முடிவின்படி செயல்படுத்தப்பட்ட திட்டமாகும். இந்நிதி உதவியை பெற மத்திய நீர்வள ஆணையத்தின்கீழ் உள்ள இயக்குநரகத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

**டெல்லியில் ஒப்புதல்**

இத் திட்டத்தின் விலை மதிப்பீடு, மத்திய நீர்வள ஆணையத்தின் விலை மதிப்பீட்டு இயக்ககம் (Cost Appraisal Directorate) அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டு, தற்போது ரூ.872.45 கோடி (2014-15-ம் ஆண்டுக்கான விலை விவரப்பட்டியல் படி) மத்திய நீர்வள ஆணையத்தின் விலை மதிப்பீட்டு இயக்கக அலுவலக கடிதம் (நாள் 7.5.2015)-ம் மூலம் இறுதி செய்யப்பட்டுள்ளது.

25.5.2015-ல் நடைபெற்ற மத்திய நீர்வள ஆணையத்தின் தொழில்நுட்ப குழுவின் கூட்டத்தில் இத் திட்டத்துக்கான விலை மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டு மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் வானிலை மாற்றம் அமைச்சகத்திலிருந்து 28.5.2015-ம் தேதி வரப்பெற்ற கடிதத்தில் சுற்றுச்சூழல் தடைநீக்க சான்று முறைப்படி பெற்று மத்திய நீர்வள ஆணையத்தின் தொழில்நுட்ப குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

புதுடில்லியில் கடந்த 16.7.2015-ல் நடைபெற்ற மத்திய நீர்வள ஆணையத்தின் தொழில்நுட்ப குழுவின் கூட்டத்தில் இத் திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது. 3 மற்றும் 4-ம் நிலைப்பணிகள் மத்திய

அரசின் நிதியுதவியுடன் மற்றும் தமிழக அரசின் ஒப்புதலுடன் விரைவில் செயலாக்கப்படும் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

**ரூ. 500 கோடி வீண் செலவு**

இத் திட்டத்தை ஏற்கெனவே திட்டமிட்டிருந்தபடி நிறைவேற் றியிருந்தால் கடந்த 2014-ம் ஆண்டிலேயே முடிவுற்றிருக்கும். ரூ.369 கோடியில் பணிகள் நிறைவேறியிருக்கும். ஆனால் அரசியல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் திட்டத்தை கிடப்பில்போட்டுவிட்டு, இப்போது மத்திய அரசிடம் நிதியை எதிர்பார்க்கிறோம் என்று மாநில அரசும், அதிகாரிகளும் கூறுவது அரசியல் இல்லாமல் வேறு என்ன என்று விவசாய பிரதிநிதிகள் கேள்வி எழுப்புகிறார்கள்.

இதுகுறித்து நேற்று நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், பெரும்படையார் நேரடியாகவே குற்றஞ்சாட்டி பேசினார். `கடந்த திமுக ஆட்சியில் கொண்டுவந்த காரணத்தால் இத் திட்டத்தை இந்த அரசு கிடப்பில் போட்டுவிட்டது. தேர்தல் வரப்போகிறது என்பதால் இப்போது மத்திய அரசிடம் நிதி கேட்டிருக்கிறோம், சுற்றுச்சூழல் அனுமதி பெற வேண்டியிருந்தது என சமாதானம் செய்யப்பார்க்கிறது.

இத் திட்டத்தின் முதல் 2 கட்ட பணிகள் சுற்றுச்சூழல் அனுமதி பெறாமலா நிறைவேற்றப்பட்டது? இப்போது ஏன் சுற்றுச்சூழல் அனுமதி என்று இழுத்தடிப்பு செய்யப்படுகிறது? அரசியல் பார்க்காமல் விவசாயத்துக்காக இத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்' என்று அவர் பேசினார்.

ஆனால் அவரது கேள்விகளுக்கு மாவட்ட ஆட்சியரும், அதிகாரி களும் சரியான பதில்களை அளிக்கவில்லை. அரசியலுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்று ஆட்சியர் சமாளிப்பு பதில் அளித்தார். ரூ. 369 கோடியில் நிறைவேற்ற வேண்டிய திட்டத்தை கிடப்பில் போட்டதால் இப்போது ரூ.872 கோடி ஒதுக்க வேண்டியிருக்கிறது. ரூ. 500 கோடி

கூடுதல் செலவுக்கு யார் காரணம்? என்று விவசாயப் பிரதிநிதிகள் கேள்வி எழுப்புகிறார்கள்.___

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழை: மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் அதிகரிப்பு



மேட்டூர், ஆக. 22–

கர்நாடகா மாநிலத்தில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பலத்த மழை பெய்து வருவதால் அங்குள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர், ஹாரங்கி, ஹேமாவதி உள்ளிட்ட அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

இதனால் அணைகளின் பாதுகாப்பு கருதி கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகளில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதேபோல் தமிழகத்தில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழை பெய்து வருவதால் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்து உள்ளது.

கர்நாடக அணைகளில் இருந்து திறந்துவிடப்பட்டுள்ள தண்ணீர் ஒகேனக்கல் வழியாக நேராக மேட்டூர் அணைக்கு வருகிறது.

நேற்று முன்தினம் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் 15 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இது நேற்று மாலை 20 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது. இதன் காரணமாக ஒகேனக்கல் மெயின் அருவி, சினிபால்ஸ், ஐந்தருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது.

ஒகேனக்கல் மெயின் அருவிக்கு செல்லும் நடைபாதையை ஒட்டியபடி தண்ணீர் செல்கிறது. காவிரி ஆற்றில் வரும் நீர்வரத்தை ஒகேனக்கல் பிலிகுண்டுலுவில் பொதுப்பணித்துறை அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர்.காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்து வருவதால் அருவிகளில் குளிக்கும் சுற்றுலா பயணிகள் பாதுகாப்பாக குளிக்க வேண்டும் என்றும், தடை செய்யப்பட்ட பகுதிகளில் குளிக்கவும் பரிசல் இயக்கவும் கூடாது என்று போலீசார் ஒலிபெருக்கி மூலம் அறிவித்து வருகின்றனர்.ஒகேனக்கல்லில் போலீசார், தீயணைப்பு துறையினர், ஊர்க்காவல் படையினர் தொடர்ந்து தீவிர கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.காவிரி ஆற்றில் தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்துள்ளதால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் நேற்று முதல் படிப்படியாக உயரத்தொடங்கி உள்ளது. நேற்று காலை நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 15 ஆயிரத்து 128 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இன்று காலை இது 16 ஆயிரத்து 568 கனஅடியாக அதிகரித்தது. அணையின் நீர்மட்டம் 91.18 அடியில் இருந்து 91.39 அடியாக உயர்ந்துள்ளது.

அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்காக 13 ஆயிரம் கன அடி தண்ணீரும், கால்வாய் பாசனத்திற்காக 500 கன அடி தண்ணீரும் திறந்துவிடப்பட்டுள்ளது.தொடர்ந்து நீர்வரத்து அதிகரிக்குமானால் அணையின் நீர்மட்டம் மேலும் உயருவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

**காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கனமழை: ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து அதிகரிப்பு**



பென்னாகரம், ஆக.22-காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்து வருவதால் கர்நாடக அணைகளில் இருந்து ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து வினாடிக்கு 20 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

கர்நாடக மாநிலம் காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கடந்த ஒருவாரமாக கனமழை பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள கிருஷ்ணராஜசாகர், கபினி, ஹாரங்கி உள்ளிட்ட அணைகளுக்கு தண்ணீர் வரத்து படிப்படியாக அதிகரித்துள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து வினாடிக்கு 13 ஆயிரத்து 500 கனஅடியாக வந்து கொண்டு இருந்தது.

இந்த நீர்வரத்தை பொதுப்பணித்துறை அதிகாரிகள் பிலிகுண்டுலுவில் கண்காணித்து வருகின்றனர்.நேற்று முன்தினம் வினாடிக்கு 15 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்தது. நேற்று காலை 19 ஆயிரத்து 300 கனஅடியாக வந்த தண்ணீர் வரத்து மேலும் அதிகரித்து மாலை 6 மணி நிலவரப்படி ஒகேனக்கல் காவிரி ஆற்றில் வினாடிக்கு 20 ஆயிரம் கனஅடியாக அதிகரித்தது.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதால் மெயின் அருவி, சினிபால்ஸ், ஐந்தருவிகளில் தண்ணீர் செந்நிறத்தில் ஆர்ப்பரித்தும், நுங்கும் நுரையுடன் கொட்டுகிறது. இதனால் ஆற்றில் நீர்வரத்து நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தண்ணீர் வரத்து மேலும் அதிகரிக்கும் என்பதால் அருவிகளில் சுற்றுலா பயணிகள் பாதுகாப்பாக குளிக்க வேண்டும். தடை செய்யப்பட்ட பகுதிகளில் குளிக்கவும், பரிசல்கள் இயக்கவும் கூடாது என்று போலீசார் ஒலிப்பெருக்கி மூலம் அறிவுறுத்தி வருகின்றனர்.இதையடுத்து ஆற்றுப்பகுதிகளில் போலீசார், தீயணைப்பு துறையினர், ஊர்க்காவல் படையினர், மீட்பு படையினர் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கர்நாடக அணைகளில் இருந்து கூடுதலாக தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால் காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து மேலும் அதிகரிக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழை: மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் அதிகரிப்பு



மேட்டூர், ஆக. 22–

கர்நாடகா மாநிலத்தில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பலத்த மழை பெய்து வருவதால் அங்குள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர், ஹாரங்கி, ஹேமாவதி உள்ளிட்ட அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

இதனால் அணைகளின் பாதுகாப்பு கருதி கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகளில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதேபோல் தமிழகத்தில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழை பெய்து வருவதால் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்து உள்ளது.

கர்நாடக அணைகளில் இருந்து திறந்துவிடப்பட்டுள்ள தண்ணீர் ஒகேனக்கல் வழியாக நேராக மேட்டூர் அணைக்கு வருகிறது.

நேற்று முன்தினம் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் 15 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இது நேற்று மாலை 20 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது. இதன் காரணமாக ஒகேனக்கல் மெயின் அருவி, சினிபால்ஸ், ஐந்தருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது.

ஒகேனக்கல் மெயின் அருவிக்கு செல்லும் நடைபாதையை ஒட்டியபடி தண்ணீர் செல்கிறது. காவிரி ஆற்றில் வரும் நீர்வரத்தை ஒகேனக்கல் பிலிகுண்டுலுவில் பொதுப்பணித்துறை அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர்.

காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்து வருவதால் அருவிகளில் குளிக்கும் சுற்றுலா பயணிகள் பாதுகாப்பாக குளிக்க வேண்டும் என்றும், தடை செய்யப்பட்ட பகுதிகளில் குளிக்கவும் பரிசல் இயக்கவும் கூடாது என்று போலீசார் ஒலிபெருக்கி மூலம் அறிவித்து வருகின்றனர்.

ஒகேனக்கல்லில் போலீசார், தீயணைப்பு துறையினர், ஊர்க்காவல் படையினர் தொடர்ந்து தீவிர கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

காவிரி ஆற்றில் தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்துள்ளதால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் நேற்று முதல் படிப்படியாக உயரத்தொடங்கி உள்ளது. நேற்று காலை நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 15 ஆயிரத்து 128 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இன்று காலை இது 16 ஆயிரத்து 568 கனஅடியாக அதிகரித்தது. அணையின் நீர்மட்டம் 91.18 அடியில் இருந்து 91.39 அடியாக உயர்ந்துள்ளது.

அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்காக 13 ஆயிரம் கன அடி தண்ணீரும், கால்வாய் பாசனத்திற்காக 500 கன அடி தண்ணீரும் திறந்துவிடப்பட்டுள்ளது.

தொடர்ந்து நீர்வரத்து அதிகரிக்குமானால் அணையின் நீர்மட்டம் மேலும் உயருவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

## மேட்டூர் அணையில் தண்ணீர் திறப்பு: வீராணம் ஏரியில் நீர்மட்டம் உயர்வு



காட்டுமன்னார்கோவில், ஆக.22–

கர்நாடக அணைகளில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. கடந்த 9–ந் தேதி டெல்டா பாசனத்திற்கும், நேற்று முன்தினம் முதல் கால்வாய் பாசனத்திற்கும் மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டு வருகிறது.

இதையொட்டி மேட்டூர் அணையில் இருந்து கல்லணைக்கு தண்ணீர் பெருகி வந்தது. அங்கிருந்து கீழ் அணைக்கு 800 கன அடி தண்ணீர் வந்தது. கீழணையிலில் இருந்து வடவாறு வழியாக கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் அருகே உள்ள வீராணம் ஏரிக்கு தண்ணீர் வந்து நிரம்பின. நேற்று 500 கன அடி தண்ணீர் வீராணம் ஏரிக்கு வந்தது. இன்று 600 கன அடி தண்ணீர் ஏரிக்கு வருகிறது.

வீராணம் ஏரியில் படிப்படியாக நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. வீராணம் ஏரியின் மொத்த நீர்மட்டம் 47.50 அடி ஆகும். நேற்று முன்தினம் 44.45 அடி நீர்மட்டம் இருந்தது. நேற்று 44.50 அடியாக உயர்ந்தது. இன்று வீராணம் ஏரியில் 44.60 அடியாக நீர்மட்டம் உயர்ந்திருக்கிறது.

வீராணம் ஏரி விரைவில் நிரம்பும் என்றும் அதன்பிறகு பாசனத்திற்கு 10 தினங்களில் தண்ணீர் திறக்க வாய்ப்பு உள்ளது என்றும் கூறப்படுகிறது.

வீராணம் ஏரியில் இருந்து சென்னைக்கு 70 கன அடி தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.